விலை அணா 4 மே தின விழா மலர் இலங்கை 42 சதம்

D. வீரராகவன்,
நியூஸ் ஏஜண்ட்,
கொட்டையூர்.
கும்பகோணம்.

மாலை மணி

மாலை 2 | சென்னை 1-5-51 | மணி 146

லெனின்

1870—ஏப்ரல் 14 பிறப்பு.

1887—லெனின் தமையன் தூக்கிலிடப்படல்.

—லெனின் பல்கலைக் கழகத்திலிருந்து தள்ளப்படுகிறார்.

1890—சட்டப் பரிட்சையில் தேர்ச்சி

1893—பீட்டர்ஸ்பர்க் நகரில் தொழிலாளர் இயக்கத்துடன் தொடர்பு

1895—கைது செய்யப்பட்டார்,

1897—சைபீரியாவுக்கு அனுப்பப்படுதல்.

1900—ருஷியாவுக்குத் திரும்புதல்.

— அயல்நாட்டுக்குப் பயணம்,

1903—புரட்சி இயக்கத்துக்குள் போல்ஷிவிக்—மென்ஷிவிக் பிளவு.

1905—முதல் ருஷியப் புரட்சி.

1917—ருஷியாவுக்கு லெனின் திரும்புகிறார்.

—புரட்சி வெற்றிபெறுகிறது.

1918—கப்ளான் என்ற துரோகியால் சுடப்பட்டு லெனின் காயமடைதல்.

1924—ஜனவரி 21—லெனின் இறப்பு.

விசித்திர தலைவர் லெனின்

[இரா. நெடுஞ்செழியன்]

உலகப் பெரும்போர் முடிந்து ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஆகிற்று. ஆனல் சமாதான வாழ்வு மீண்டும் வரவில்லை. போர்க்காலத்தில் பல குறைபாடுகள் உண்டாயின. அவை போர் முடிந்ததும் நீங்கவில்லை வளர்ந்துள்ளன. ஒவ்வொரு நாட்டிலும் தோன்றியுள்ள பொருளாதார நெருக்கடி முன்னறிவிப்பின்றி வந்ததல்ல, பாமர மக்களுக்குத் தெரியாவிட்டாலும் அரசியல் வாதிகள் எதிர்பார்த்ததே நெருக்கடியைத் தீர்க்க பொருளாதார நிபுணர்கள் போட்ட திட்டங்கள் பெரு வெள்ளத்தின் முன் கோலப்பட்ட சிறு மணல் மேடுகள் போல அழிந்துவிட்டன. பழைய கணக்கு பயனற்றதாகிவிட்டது சமாளிக்க முடியாத பொருளாதார அரசியல் குழப்பங்கள், பல நூற்றுண்டுகளாகப் பாதுகாக்கப்பட்ட வல்லரசுகள், அரசியல் அமைப்புகள் சமூகக் கட்டுப்பாடுகள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள், வர்க்க வேற்றுமைகள், கொடிப்பொழுதில் மாற்றப்பட்டுவிடுமோ என்று அரசியல்வாதிகள் அஞ்சுகின்றனர்பழைய அமைப்புகளின் அடிப்படையை ஆட்டிவைக்கும் அவ்வளவு சீர்கேடுகளும் இன்று உலகெங்கணும் தோன்றியுள்ளன. கடைவீதியில் காணப்படும் நீண்ட வரிசை, உணவுப் பஞ்சம், உடைக்குறை, வீடுகள் போதாமை, வேலையில்லாமை, விலைவாசிகள் ஏற்றம் இவை நாட்டின் நல்ல நிலைமையைக் குறிப்பதாகாது. 'போர் முடிந்ததும் புது வாழ்வு வரும், புத்துலகம் மலரும்' என்று நம்பிய மக்கள் மனதில், மகிழ்ச்சி இல்லை, சோகம் கப்பியுள்ளது. பரிதாபமான நிலை, ஆனல் பழைமையைப் பயமுறுத்தும் நிலை.

வாழ்க்கையின் மூலாதார வசதிகளையிழந்து மக்கள் படும் அவதிக்குக் காரணம் உற்பத்திகுறைந்துவிட்டது என்று அர்த்தமல்ல. வேண்டுமளவுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கும், அவற்றை உபயோகிக்க வேண்டிய மக்களுக்கும் டையே தடைகள் பல இருக்கின்றன. வசதிகள் இருக்கின்றன பெரும்பாலானவர்களுக்கு அவை கிடைப்பதில்லை.

வாழ்க்கை வசதிகளைப் பெறவும், பெற்ற வசதிகளைக் காப்பாற்றவும் மனிதன் பட்ட கஷ்டங்களின் தொகுப்பே உலக வரலாறுகும். கல்லோடு கல்லைத் தாக்கிக் கனல் கிளப்பிய காலத்திலிருந்து, சிறு பொத்தானை அழுத்தி மின்சார ஒளி பெறும் காலம்வரை படிப்படியாக வாழ்க்கை வசதிகள் வளர்ந்தன 'வசதிகள் நிரம்பி, ஒய்வும் அமைதியும் மிக்க இன்ப வாழ்வு!

தோழர் மாலடோவ்

அந்தக் கனவுதான் அவனது ஓயாத உழைப்பின் தூண்டுகோலாக அமைந்தது. கவிவாணர்களும், தத்துவ ஞானிகளும் அதையே நல்ல வாழ்வு எனச் சுட்டிக்காட்டினர். அவன் கனவு, பலிக்கும் காலம் வந்தது. விஞ்ஞான ஆராய்ச்சிகள் பிரமிக்கத் தக்க முன்னேற்றத்தை உண்டாக்கின. வேலை நேரத்தைக் குறைக்க இயந்திர வசதிகளும், ஒய்வு நேரத்தைக் கழிக்க உல்லாச வழிகளும் அதிகரித்தன. இல்லாமை, போதாமைக் குறைகளை நீக்கும் ஆற்றல் கிடைத்தது. முதன் முறையாக அவன் கனவு நனவாகும் வகையில் வளமை பெருகிய போதிலும், அவனுக்கு மகிழ்ச்சியும், நம்பிக்கையும் உண்டாகவில்லை பயமும் திகிலும் அவனை வதைக்கின்றன. வளமை பெருகிய போதிலும் வறுமை உலகைவிட்டு நீங்கவில்லை.

பாங்கி முறிகிறது மார்க்கட் விழுந்துவிட்டது.

ஆலைகளில் கதவடைப்பு; வேலையில்லாத் திண்டாட்டம்.

விலைவாசிகள் ஏற்றம்; வேலை நிறுத்த ஆரம்பம்.

உணவுப் பஞ்சம்; பட்டினிச் சாவுகள்.

இவை நாள் தவறுமல் பத்திரிக்கைச் செய்திகளாகிவிட்டன.

பெரியதொரு பொருளாதார நெருக்கடியில் இங்கிலாந்து தத்தளிக்கிறது.

பிரான்சில் மாலையில் அமைக்கப்படும் மந்திரி சபை மறு நாள் காலையில் கலைந்துவிடுகிறது.

அமெரிக்காவின் ஆசைவார்த்தைகளும, கடன் ஒப்பந்தங்களும மேற்கு ஐரோப்பிய நாடுகளின் கொந்தளிப்பை அடக்குவதாயில்லை.

எதிர்பாராத ஏற்றத் தாழ்வுகளால் அல்லற்பட்டு, நம்பிக்கையிழந்த நாடுகளிடை ருஷியாஒன்று தான் நிமிர்ந்து நிற்கிறது. மற்ற நாடுகளிலிருந்து அவதிக்குரல்கள் வெளிப்படுகிற நேரத்தில் ருஷியாவிலிருந்துதான் நல்ல செய்திகள் வருகின்றன அதிக அறுவடை, புது ஆலைகள் பண்ணைகளின் வளர்ச்சி, பள்ளிகள் துவக்கம், நாசமடைந்த நகரங்களைப்புதுப்பித்தல், 5 ஆண்டுத் திட்டம் இவை ருஷியா உலகிற்குத் தரும்செய்திகள், "காலில் இரத்தம் வடிகிறதே! கல் தாக்கியதா? முள் குத்தியதா?" என்று மற்ற நாடுகள் சங்கடப்படும் நிலையில் கல்லும் முள்ளும் நீக்கிய நேர்வழியில் ருஷி ாபோய்க் கொண்டிருக்கிறது. சண்டை நீங்கியவுடனேயே அங்கு சமாதான வாழ்வு ஆரம்பமாகி விட்டது.

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய நாடுகளினல் அலட்சியப் படுத்தப்பட்ட ருஷியா, ஏழ்மை பயம், மூட நம்பிக்கை இவைகளின் உறைவிடமாக விளங்கிய ருஷியா கொடுங் கோன்மைக்கும் அதன் முன் புழுவெனத் துடிக்கும் மக்களின் நிலைக்கும் உதாரணமாக விளங்கிய ருஷியா, இன்று மற்ற நாடுகளை ஏளனத்துடன் பார்க்கிறது.

ருஷியாவின் அபரிமிதமான சக்தியும், ஆச்சரியப் படத்தக்க முன்னேற்றமும் உலகத்திற்கு வியப்பாக உள்ளன. அதன் அளவிடற்கரிய சக்தி எங்கிருந்து வந்தது? அசைக்க முடியாதநம்பிக்கை எப்பொழுது பிறந்தது? அதன்புது சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தது யார்?

இதற்குப் பதில் ருஷியாவின் வரலாறுதான். கல்லும் முள்ளும் நிரம்பிய காட்டுப் பிரதேசங்கள் கல்வி வாசனை அறியாத பாமரர்கள் அவர்களை உருக்கிய ஏழ்மை, எதேச்சாதிகாரிகளாககாட்சியளித்த பிரபுக்கள் கொடுங்கோலர்களான ஜார் பரம்பரை மதோன்மத்தர்களான மந்திரிமார், கொள்ளையடித்த குருமார், இருண்ட சிறைச்சாலை, கழுகுகள் உலவும் தூக்கு மேடை! ரத்தத்தால் சிவப்பேறிய சாட்டை இவைகளை ருஷிய வரலாற்றில் படிக்கலாம்.

இவைமட்டுமல்ல, கொடுங்கோன்மைக்கு வந்த எதிர்ப்புகள் கொலை செய்யப்பட்ட மன்னர்கள், அதற்காகத் தூக்கில் துவண்ட இளைஞர்கள், பிரபுக்களை எதிர்த்த அடிமைகள், அவதிக்குள்ளான உழவர்கள் அழுத்தப்பட்ட குரல்கள், அடங்க மறுத்த வீரர்கள், மக்களுக்கு மதிப்பளித்த உயர்தர இலக்கிய ஆசிரியர்கள், இவர்களையும் வரலாற்றில் சந்திக்கலாம்.

இவைகளெல்லாவற்றையும் சிறுமைப்படுத்தும் விதத்தில் புதிய சகாப்தத்தின் அறிகுறியாய் விளங்குவது லெனின் உருவம். லெனின் பெயர் உலக வரலாற்றிலிருந்து ஒதுக்க முடியாத பெயராகிவிட்டது. புதிய அமைப்பைத் துவக்கியவர், புது நம்பிக்கையைத் தந்தவர் என்ற அளவில் லெனின் என்ற சொல், கொள்கை, திட்டம், அமைப்பு இவைகளுக்கே பெயராகி விட்டது.

1914-ல் ஆரம்பித்த ஐரோப்பிய சண்டையில் இரு படை வரிசைகளும் சலித்திருந்தன உள் நாட்டில் மக்கள் சமாதானம் வேண்டினார்கள். வசதிகள் குறைந்தன, பஞ்சம் வந்தது. மக்களின் அவதிக்குரல் அதிகமாயிற்று. மன்னன் விழித்தான், மக்கள் எதை வேண்டு

(6 ம் பக்கம் பார்க்க)

மே தின விழா கம்யூனிஸ்ட் கட்சியின் "காபிரைட்" அல்ல!

……………(0)……………

திராவிட இனமே பாட்டாளிகளின் இனம்!

……………(ஃ)……………

பாட்டாளிக்குப் புதுவாழ்வு!

……………………………

தொழிலாளி துயரின் உருவமாகிறான்!

மே தின விழாவன்று, உலகப் பாட்டாளி மக்கள் பெறும் உணர்ச்சியும் மன -ரமும், அவர்களின் விடுதலைப்போருக்குப் பக்க பலம்-முதலாளித்துவத்துக்கு எச்சரிக்கை-பழமைக்குச் சாவோலை!

பழைய ஏகாதிபத்யங்கள் சரியும் சத்தம் ஒருபுறம் கேட்கப்படுகிறது-ஆனால் அதேபோது, புதிய ஏகாதிபதியத்தின் குரலும் கேட்கப்படுகிறது.

ஒருபுறம அமெரிக்கா, தேசியத்தின் தலைமைபூண்டு, முதலாளித்வ முடிக்கயிற்றை வீசி, உலகை ஆள திட்டமிடுகிறது—இந்த முதலாளித்துவ ஆட்சியை முறியடிக்கும் சக்தியை, உலகெங்கும் எழச்செய்த சோவியத் ரஷ்யா, மற்றோர் புறம் இருக்கிறது.

அணுக்குண்டும் பணக்குண்டும் போதும் என்று அமெரிக்கா கருதுகிறது.

சோவியத் ரஷியாவோ, அந்தக் குண்டுகளைச் செய்பவனும் பாட்டாளி, அவன் என் தோழன், எனவே அவனிருக்கப் பயமேன் என்று எண்ணுகிறது.

உலக வரலாற்றிலேயே, ஒரு நாட்டை மற்றொரு நாடு, ராணுவ பலத்தால் அடக்கி, காரணம் காட்டாமலே ஆட்சி செய்து எதிர்த்தால் பயங்கரமாகத் தாக்கிவந்த கட்டம் முடிந்தது. வியாபாரக் கொடிபோட்டு, ராஜ தந்திர நடை நடந்து, சாகசப் பேச்சு பேசி, சுரண்டும் கட்டம் துவக்கப்பட்டு அந்தக் கட்டத்தின் இறுதி வாயிலில் வந்துள்ளது.

இடையே மூண்டபெரும்போர் கிளப்பியுள்ள பல பிரச்னைகளைக்கூடக் கவனிக்க நேரமின்றி, வல்லரசுகள் கடைசி சண்டையான, தனிஉடமை பொதுவுடமை வாதிகள் ஆகியோருக்குள்ளே நடக்கும் போருக்கு படை திரட்டும் காரியத்தில் வேகமாக ஈடுபடுகின்றன. பல கொடிகள் உள்ளன பல்வேறு நாடுகளிலே. ஆனால் இந்தப்புதுச் சண்டைக்கு இரண்டே கொடிகள் பசிக்கொடி! பணக்கொடி! அமெரிக்காவிடம் பணக்கொடி இருக்கிறது! அதை மிகப் பெருமையுடன் வீசிக்காட்டுகிறது!!

இங்கு பலமிழந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அமெரிக்காவுக்கும் வடநாட்டு முதலாளித்துவத்துக்கும் கூட்டு ஏற்படுத்தும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறது. இந்தக் கூட்டு தங்கள் இலாப வேட்டைக்கு ஏற்றதாக அமைகிறது என்று வடநாட்டு பிர்லாக் கூட்டம் பூரிக்கிறது! பூரித்து வெற்றிபெற்றக் காங்கிரசைக் கொண்டு இந்த நோக்கத்தை நிறைவேற்றி வைக்கும் முறையில் நாட்டை ஆளச் செய்கிறது. அந்த ஆட்சியின் கீழ் நாம் வாழ்கிறோம்! வாழ்கிறோமா? எந்த நேரத்தில் எந்த விதமான புதுச்சட்டம் பிறந்து எந்தச் சிறைக்கு அனுப்பப்படுவோமோ என்ற சூழ்நிலையில் உலவுகிறோம்.

—C. N. அண்ணாத்துரை

வைகாசியில் கருடசேவை
ஆனியில் திருமஞ்சனம்
ஆடிப் பூர உற்சவம்
ஆவணி அவிட்டம
புரட்டாசி சனிக்கிழமை உற்சவம்
ஐப்பசியில் தீபாவளி
கார்த்திகையில் தீபவிழா
மார்கழியில் திருவாதிரை
தை பூசம்
மாசி மகம்
பங்குனி உத்திரம், .
சித்திரையில் பௌர்ணமி

இப்படி, மாதந்தோறும் ஒவ்வொரு திருவிழா நடத்தி, தலைமுறை தலைமுறையாக நடத்திப் பழக்கப்பட்ட மக்களிடையே, மேதினவிழா கொண்டாட முற்பட்டிருக்கிறோம். மேவிழா, மேதினியில் மக்களுக்கு வாழ்வளிக்கும் விழா என்று கூறினால் மக்கள் சுலபத்தில் நம்பமாட்டார்கள். ஆச்சரியப்படுவார்கள் நாட்டுமக்களிலே, சிந்திக்கக்கற்றுக் கொண்ட பகுதியினருக்கு மட்டுமே மேதின விழாவின் முக்யத்துவம் தெரியும்-மற்றவர்கள் இன்னமும், நான் முன்னாலே குறிப்பிட்ட பல்வேறு திருவிழாக்களிலேயே ஈடுபடுபவர்கள்-குடும்பம் குடும்பமாக.

மே தினம் என்ற உடனே சர்க்காருக்குச் சந்தேகம் வந்துவிடுகிறது. பொதுமக்கள் எக்காரணத்தைக்கொண்டோ, எந்த விழாவிற்காகவோ ஒன்று திரண்டால், இன்றைய ஆட்சியாளர்கள், சந்தேகிக்கின்றனர் — சங்கடப்படுகின்றனர். நான் இந்தப்போக்கைக் கண்டு ஆச்சரியப்படவில்லை. சர்க்காரின் சுபாவம் அது. ஆனால் நம்முடைய கட்சி நண்பர்களிலேயே சிலருக்குச் சந்தேகம் உண்டாகிறது, மே தினத்தை நாம் என் கொண்டாட வேண்டும், அந்த விழா கம்யூனிஸ்டுகளல்லவா கொண்டாட வேண்டும், நமக்கு எதற்கு அந்த விழா, என்று எண்ணுகின்றனர். இது ஓர் தவறான கருத்து.

மேதினம், கம்யூனிஸ்டுக் கட்சியின் ஏகபோக மிராசு பாத்யதை அல்ல. மே தினம், கம்யூனிஸ்டு கட்சி ஆளவந்த பிறகு ஏற்பட்ட சம்பவமும் அல்ல. மேவிழா, ரஷியாவிலே அல்ல முதன் முறையாக கொண்டாடப்பட்டது. மேதினி எங்கும் மே தினம் கொண்டாடப் படுகிறது. இதே நேரத்தில், உலகிலே பல்வேறு பட்டினங்களிலே மேவிழா, மிக விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஸ்டாலின் பேசிக்கொண்டிருப்பார் மாஸ்கோவில். அதுபோன்றே ஒவ்வோர் தலைநகரிலும், தலைவர்கள் மேதினத்தை கொண்டாடிக்கொண்டிருப்பர். புரட்சி தினம், செஞ்சேனை தினம் என்ற விழாக்கள், ரஷியாவிலே, விமரிசையாகவே கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆனால் அங்கு மட்டுந்தான். உலகிலே வேறுநாடுகள், இந்த விழாக்களை, சோவியத் ரஷியாவுக்கு மட்டுமே சொந்தமான விழா என்று கருதுகின்றன. ஆனால் இந்த மே தினம், மேதினி எங்கும் உள்ளவர்கள், எமக்கும் அந்நாள் விழாதான் என்று உரிமை கொண்டாடும் அளவுக்கு, இன்று பிரபல்யம் அடைந்துவிட்டது. எனவே, மே தினம், கம்யூனிஸ்டுகளின் விழா என்று கருதுவதும், அதனை திராவிடர் இயக்கத்தார் கொண்டாடவேண்டிய அவசியமில்லை என்று எண்ணுவதும் சரியல்ல.

பாட்டாளி மக்களின் விடுதலை விழா, மே தினம். நாடு அல்ல, இதற்கு எல்லை! பாட்டாளிகள் வாழ்வுக்காக, விடுதலைக்காக, உரிமைக்காக, மே தினத்தைக் கொண்டாடுகின்றனர். நாளொன்றுக்கு 8 மணி நேரம் உழைப்பது, 8 மணி நேரம் குடும்பத்தினருடன் குதூகலமாக வாழ்வது, மற்ற 8 மணி நேரம் ஓய்வாக இருப்பது-இந்தத் திட்டத்தை, மே தினம் எடுத்துக் கூறுகிறது. பாட்டாளிக்குப் புது வாழ்வு அமையவேண்டுமானால், இந்தத் திட்டம் தேவை உழைத்து அலுடபதும், உருக்குலைவதும், ஓயாமல் உழைப்பதும், வாழ்வின் சுவையையே காணாதிருப்பதும், இன்று பாட்டாளியின் 'கதி'யாக இருக்கிறது. இதனால், தொழிலாளி, துயரின் உருவமாகிறான்—அடிமைப்படுகிறான்—வாழ்வு பெரியதோர் சுமை என்று எண்ணுகிறான். இந்த நிலையை மாற்ற வேண்டுமென்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் எட்டு மணி நேர வேலைத் திட்டத்தை வலியுறுத்தினர்—அதனை வலியுறுத்த ஆண்டுதோறும், மே மாதம் முதல் தேதி அன்று, விழா நாளாகக் கொண்டாட்டம் நடத்த ஏற்பாடு செய்தனர். இந்த விழாவின் துவக்கத்தின்போது, சோவியத் ரஷியா இல்லை! ஜாரின் ரஷியாவே இருந்தது. ரஷிய நாடு அல்ல, இவ்விழா விமரிசையாக நடந்த இடம். அமெரிக்கா. எனவே, மே தினத்தைப் பாட்டாளிகளின் விடுதலைக்காகப் பாடுபடும் நோக்கம் கொண்ட எல்லாக் கட்சியினரும் கொண்டாடலாம். திராவிடர் இயக்கத்தாருக்கு இது கடமைமட்டுமல்ல, உரிமையுங்கூட, ஏனெனில், திராவிடர் இயக்கம் ஏழை எளியவரின் புது வாழ்வுக்காகப் பணிபுரிவதையே திட்டமாகக் கொண்டிருக்கிறது திராவிட இனமே; பாட்டாளி இனம் என்று விளக்கிவருகிறது— திராவிடக் கலாச்சாரம் 'உழைத்து வாழ்வதை'யே வலியுறுத்துகிறது; யாககுண்டத்தருகே அமர்ந்திருப்பது, ஓமப்புகையைக் காட்டி ஊரை ஏய்ப்பது, மோட்ச லோகத்துக்குச் சீட்டளிப்பது, வேதமோதி வாழ்வு நடாத்துவது, ஆரூடம் கூறிப் பிழைப்பது ஆகியவைகள், திராவிட இனக் கலாச்சாரத்துக்கு முற்றிலும் முரணானது—ஆரிய கலாச்சாரத்தின் இலட்சணம் அது.

உழைப்புக்கும் தொழிலுக்கும், உயர்வு கூறுவது திராவிடக் கலாச்சாரம்.

அவை இரண்டும், உயர்ந்த வகுப்பினருக்கு உகந்த காரியமல்ல என்று கூறுவது ஆரியப்பண்பு.

!

திராவிடரின் கண்கள், ஏர்முனை, போர்முனை, கடலடி, காட்டுப்பாதை நாட்டுநிலை, இவைகளின் மீது செல்வன. "ஞானக்கண்"ணினரான ஆரியருக்கோ இவை அல்ல. சத்ய லோகம், அதல, சுதல, தராதல, பாதாள லோகங்கள் ஆகியவற்றின் மீது கண்கள் செல்லக்கூடியன.

எனவே, கலாச்சார முறைப்படி பார்த்தாலும், வரலாறு காட்டும் நமது வாழ்க்கை முறைப்படி பார்த்தாலும், இன்றைய நிலையைப்பார்த்தாலும், நாம் பாட்டாளிகளே. எனவே, பாட்டாளிகளின் விடுதலைக்கான இந்த மே தினத்தைக் கொண்டாடும் உரிமை மற்றவர்களுக்கு இருப்பதைவிட, நமக்கே அதிகம். அது மட்டுமல்ல, மே தினம், மாஸ்கோ தினம், செஞ்சேனை தினம் என்று கொண்டாடும் பல கட்சிகளிலே உள்ள பல தலைவர்கள் காசியைக் கடந்து சென்றதில்லை. நமது திராவிடர் கழகத் தலைவர் பெரியார், மாஸ்கோ வீதிகளிலே உலாவினவர்-சோவியத் மாட்சியை நேரடியாகக்கண்டவர்-பொது உடைமைக்காரர் என்பதற்காக, சர்க்காரு

டைய தொல்லைகளுக்குஆளானவர். மற்றும் நமது பத்திரிகைகளுக்கு ஜாமீன் கட்டியிருக்கிறோம், புத்தகங்கள் பறிமுதலாகி உள்ளன, நாடகங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளன, கூட்டங்களுக்கு 144 தடை, நமது இயக்கத் தோழர்களுக்குச் சிறை இந்தக் காரணத்தால். மற்ற எந்தக் கட்சிக்காரரும் சிந்திக்காத நாட்களிலேயே, நாம், சுயமரியாதை இயக்கத்தினர், மே தினத்தைப் பற்றிச் சிந்தித்திருக்கிறோம்.

"முதன் முதல் தமிழ்நாட்டிலே மே தினம் கொண்டாடிய கட்சி, சுயமரியாதைக் கட்சிதான்.

எனவேதான், நாம் மே தின விழாவை, உரிமையுடனும் உவகையுடனும் கொண்டாட வேண்டியவர்கள் என்று கூறுகிறேன். அந்த விழா, ஏதோ கம்யூனிஸ்டு கட்சியின் 'காபிரைட்' என்று எண்ணிட வேண்டியதில்லை.

1889-ம் ஆண்டு, சர்வதேச சமதர்ம மாநாடு, பாரிஸ் பட்டினத்தில் கூடி, மே மாதம் முதல் தேதியை உலகப் பாட்டாளி மக்களின் விடுமுறை நாளாகக் கொண்டாடும்படி, தீர்மானம் நிறைவேற்று. அது முதல், மேதினம் உலகிலே, எல்லா நாடுகளிலும், பாட்டாளிகளின் விடுதலை விழா நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஜாரின் கொடுங்கோலாட்சிக் காலத்திலும், ரஷியாவில் மேதினம் மகத்தான விழாவாகக் கொண்டாடப்பட்டே வந்தது. பயங்கரமான அடக்குமுறை இருந்தும்கூட. மே தினத்தன்று, ஊர்வலம் நடத்தியும், துண்டு வெளியீடுகளை வழங்கியும், பொதுக்கூட்டம் நடத்தியும், மே தினத்தை அவர்கள் கொண்டாடத் தவறியதில்லை. போலீசின் தடியடி மட்டுமல்ல, பட்டாளத்தாரின் குண்டுகள் விழாக் கொண்டாடுவோர்மீது பாய்ந்த காலம் அது.

மே தினத்தை, தொழிலாளரின் விடுதலை விழா நாளாக மாற்றி அமைத்தவர். மாவீரர் லெனின். தங்கள் குறைகளைப் போக்கிக் கொள்ள, உரிமைகளைப்பெற இந்த மே தினத்தை, பரணிபாடும் நாளாக்கினார் புரட்சி வீரர். அவருடைய அரிய முயற்சியினால், ரஷியாவிலே, மேதின விழா, ஜாராட்சியை ஒழிக்கும் மாபெரும் புரட்சிக்குப் பயிற்சி நாளாக அமையலாயிற்று.

கொடுமைகளைக் கண்டு அஞ்சா நெஞ்சமும், பயங்கர அடக்குமுறை கண்டும் பணிய மறுக்கும் உரமும், வாட்டிவதைக்கும் எதேச்சாதிகாரத்தின் முன்பு வளையாதபோக்கும் பெற மே விழாவைப் பாசறைப்பள்ளியாக்கிக் கொண்டனர் ரஷியப் பாட்டாளிக்கள்.

1942ம் ஆண்டு மே தினத்தன்று 4 இலட்சம் பாட்டாளிகள் வேலை நிறுத்தம் செய்தனர்.

நாலு இலட்சம்! எவ்வளவு பிரமாண்டமான கூட்டம் என்பதை சிந்தித்துப் பார்த்தால், அந்த மே தின மகத்துவம் தெரியும். நாலு இலட்சம் தொழிலாளர்கள், தங்கள் வாழ்வுக்காக விடுதலைக்காக உரிமைக்காக ஒன்று திரண்டிடும் காட்சியை மனக்கண்முன் நிறுத்திப் பாருங்கள். ஜார், அவனுடைய படைபலம், சக்திவாய்ந்ததுதான். ஆனால் நாலு இலட்சம் உழைப்பாளர்கள் உள்ள உரத்தோடு நிற்பவர்கள் உரிமைப்போர் தொடுப்பவர்கள் இவர்களின் வல்லமையின் முன்பு, ஜாரின் ஆட்சிபலமும் ராணுவ பலமும் என்ன செய்ய முடியும்!

தொழிலாளர்கள், தங்கள் வல்லமையை கூட்டுச்சக்தியை உணர்ந்து கொள்ள, உணருவதன் மூலம் மனஉறுதி பெற 1912-ம் ஆண்டு நடைபெற்ற மேதின விழா பயன்பட்டது.

1914-ல்-இரண்டாண்டுகளுக்குப் பிறகு, மேதின விழாவன்று 5 இலட்சம் பாட்டாளிகள் பவனி வந்தனர்.

ஜாராட்சி ஒழிக்கப்பட்டு, பாட்டாளிகள் வெற்றிமுரசு கொட்டிய பிறகு 1917 ல் தங்கு தடையின்றி மேதின விழா, விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆண்டு தோறும் மேதின விழா மேதினி எங்கும் கொண்டாடப்படுகிறது என்ற போதிலும், ரஷியாவிலே, குதூகலமாகக் கொண்டாடப்படும் முறையே தனிச் சிறப்புடையது. பல்வேறு தொழில் துறையிலேஉள்ளவர்கள், உலகுக்கு சோவியத் ஆட்சிமுறையின் சோபிதத்தை விளக்குவதற்காக, தத்தமது திறமையைக் காட்டுவர். சோவியத் ரஷ்யாவின் வல்லமையும் வளமும் விளங்கும் காட்சிகள் அன்று நடைபெறும். பட்டாளம் பவனி வரும். விமானங்கள் வட்டமிடும் கல்லூரி மாணவர்கள் களிப்புடன் பவனி வருவர். தேம் கேளிக்கை, ரஷியாவில் மே தினத்துக்கு ஈடான விழா இல்லையென்று கூறலாம், அவ்வளவு ஆனந்தமாக இருக்கும், சோவியத் தலைவர்களின் சொற்பொழிவுகள் உலகுக்கு சோவியத்தின் சிறப்பை விளக்கிடுவதாக அமையும்.

அணுகுண்டையும் பண குண்டையும் கையில் வைத்துக்கொண்டு மிரட்டும், அமெரிக்கா தயாரிக்கும் புதிய ஏகாதிபத்தியம், புதியதோர் போர் தொடரக்கூடும் என்ற எண்ணம் எங்கும் பரவி வருகிறதல்லவா? அதிலும், சோவியத் ரஷ்யாவின் மீதுதான் அமெரிக்காவின் கண் பாய்கிறது என்பதும் வெளிப்படையாகத் தெரிந்த விஷயந்தானே. ஆகவேதான், அவ்வாண்டு மே விழாவிலே பேசிய சோவியத் தலைவர்கள், புதுப் போரை உண்டாக்கும் போக்கைக் கண்டித்ததுடன், தவிர்க்க முடியாத நிலையில் போர் மூண்டுவிடுமானால், சோவியத் அதனைச் சமாளிக்கும் என்பதை விளக்கப் புதிய டாங்குப் படைகளின் பவனியை விழா விசேஷங்களில் ஒன்றாகக் காட்டினர்.

நிலையாக நிற்கக்கூடிய சமாதானத்துக்காக ரஷியா போராடி வருகிறது. சர்வதேசங்களுடனும் ஒத்துழைக்க விரும்புகிறது. சம உரிமை கோருகிறது. சோவியத் சர்க்காரின் வெளிநாட்டு கொள்கையைச் சோவியத்மக்கள் அனைவரும் முழு மனதுடன் ஆதரிக்கின்றனர் என்று முழக்கம் செய்தார்.

அதாவது, இவ்வாண்டு மே தினத்தை இன்றைய உலக நிலையில் சோவியத்தின் நிலை எப்படி இருக்கிறது. எம்மாதிரியாக போக்கும் முறைபுப தேவை என்பதை விளக்கப் பயன் படுத்திக்கொண்டனர்.

இதே முறையில் நாஜிகளுடன் போர் நடத்தி வந்தபோதுமேதினப் —நாஜிசத்தை அழித்தாகவேண்டும் என்ற சோவியத் உறுதியைத் தெரிவிக்கப பயன்பட்டது.

"பட்டினி! பசி! போதுமான உணவு இல்லை! அரசியலிலே உள்ள குழப்பம் ஒழிந்து, குடிஅரசு ஆட்சி ஓங்கவேண்டும்" இம்முறையில் முழக்கமிட்டவண்ணம் ஹாம்பர்க் நகரிலே ஐம்பதினாயிரம் தொழிலாளர்கள் மே தினம் கொண்டாடினர்.

ஸ்பெயினில், பிராங்கோ ஆட்சியை ஒழிக்கும் முழக்கமாகத் திகழ்ந்தது மே தினம்.

பாரிஸ் நகரிலே மே தினத்தன்று கூலி உயரவேண்டும் விலைவாசிகள் மக்களை அழுத்துவதாக இருக்கக் கூடாது, இந்தோனேஷியிலுள்ள அமளிநிலை ஒழியவேண்டும் என்று இவ்வண்ணம் முழக்கமிட்டனர்.

அதாவது ஒவ்வொரு ஆண்டும் மே தினத்தன்று, அந்தந்த நாட்டின் பிரத்யேகப் பிரச்னைகளைப் பற்றிப் பேசவும், பொதுவாக மக்களின் விடுதலையையும், பாட்டாளிகளின் நல்வாழ்க்கையையும் வற்புறுத்தவும் மே தினம் பயன்படுத்தப்படுகிறது மக்களின்மீது திணிக்கப்பட்டுள்ள அடிமைத்தனம் எந்தெந்த வகையானவைகளாக உள்ளனவோ அவைகளை எந்தெந்த முறைகளின் மூலம் முறியடிக்க முடியும் மக்கள் முழுவாழ்வுபெறச் செய்யும் வழி என்ன என்பதை மக்கள்கூடி யோசிக்கவும், உறுதி பெறவும, உரிமை முழக்கமிடவும், மே தினம் ஓர் வாய்ப்பு. எனவே திராவிடர் கழகத்தாராகிய நாம், திராவிட நாட்டின் பிரத்யேகப் பிரச்னைகளைப்பற்றி யோசிக்கவும் திராவிடரின் அடிமைத் தளைகளிலே எவை எவை என்னென்ன வகையானவை, அவைகளை நீக்க என்னென்ன விதமான முறைகளை கையாளவேண்டும் என்று மேதினத்தன்று யோசிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மற்றக் கட்சிக்காரர்கள் மேதினம்
(14-ம் பக்கம் பார்க்க)



பெட்ரோகாட் நகரின் பாதுகாப்புப் போரின் பொழுது, லெனின், ஸ்டாலின் இருவரும் பிரதம காரியாலயத்தில் கூடி ஆலோசிக்கின்றனர்.

புரட்சி வளர்ந்த கதை

[மு. கருணாநிதி]

மே தினம்! தொழிலாளர் வாழ்வை வதக்கி அவர்கள் எலும்புகளை மென்று தின்ற தங்கள் மேனியை மெருகேற்றிக் கொண்ட முதலாளிவர்க்கத்தின் மென்னியை இறுக்கிக் கொன்றவரின் கொண்டாட்டம். பீட்டர்ஸ்பர்க்நகரத்துப் பாட்டாளி மக்கள் பசியெனக் கதறியதற்காக அவர்களை ரத்தத்தில் மிதக்கவிட்டுக்கோரச்சிரிப்பு சிரித்த கோமான்களின் குரல் வளையை அமுக்கியவர்களின் குதூகல விழா.

மலைப்பாம்பினுங் கொடிய மதம் மாய்ந்தது. மக்களின் வாழ்வைக் குடித்து ஏப்பமிட்ட பணக்காரப்



பேய்க் கும்பலின் ‘பவிசு’ குறைந்தது...கஷ்டப்பட்டதை—கண்ணீர் விட்டதை—கலங்கி நின்றதை-கதியிலை எனக் கதறியதை—கண்ணெடுத்தும் பாராமல் கற்களாய் நின்று அறிவைக் காவு கொண்ட கடவுள் கூட்டத்தின் வம்சம் பூண்டற்றுப் போனது — என்ற மகிழ்ச்சியை நரம்புகளில் ஏற்றிக்கொண்டுரஷ்யப் பாட்டாளி மக்கள் மாஸ்கோ செஞ் சதுக்கத்தில் பிணமாக வீற்றிருக்கிற மாவீரன் லெனினை நினைத்துக்கொண்டு வீரநர்த்தனம் புரிகின்ற வெற்றி விழா.

மனித சாதியின் உயர்வுக்கே ஏணியாக-வாழ்வுக்கு வழிகாட்டியாக-அமைந்தது மே தினம்,

1917 மார்ச் மாதம் 8-ம் நாள் புரட்சி உருவாயிற்று ரஷ்யாவில். பீட்ரோகிராட் நகரில் உள்ள நெசவுத் தொழிலாளப் பெண்கள் புரட்சி பவனி நடத்தினர். 1917 நவம்பர் 6-ம் நாள் சோவியத் அரசாங்கம் தோற்றுவிக்கப்பட்டது லெனின் அமைச்சர் குழுவின் தலைவன். புரட்சிகளுக்கெல்லாம் வித்தாக இருந்தது ஒரு தியாகியின் புன்னகை. 1905-ல் அடக்குமுறை தாங்கமாட்டாமல் துடித்தெழுந்த ஒரு இளைஞன், நிக்கோலஸ் மன்னனின் நெருங்கிய உறவினனான உயர்தர இராணுவ உத்தியோகஸ்தன் செர்கியஸ் கோமகனைப் பட்டப்பகலில் கொன்று குவித்தான். கொலை செய்தவன் நிலை குலைந்து ஓடவில்லை. சமுதாயத்திற்குத் தேவையான ஒரு காரியத்தைச் செய்ததாகவே எண்ணினான். போலீஸ் அதிகாரிகள் அந்தக் கொலைகாரனிடம் ஏதாவது வாக்கு மூலம் வாங்கிவிட வேண்டுமெனத் தலை கீழாய் நின்று பார்த்தார்கள் ஒரு எழுத்துக்கூட எழுதிக் கொள்ள முடியவில்லை. எப்படியும் சாகப் போகிறோம் என்ற நெஞ்சுரம் அவனை ஊமையாக்கிவிட்டது. மௌனமாகவே இருந்தான்; தூக்கு மேடையிலே நிறுத்தப்பட்டான். ‘கொலைகாரனே! உன் உயிரைக் குடிக்கப் போகிறேன் என்று கும்மாளம் போட்டது தூக்கு மேடை. அப்பொழுதுதான் அவன் உதடுகள் அசைந்தன. பேசுவதற்கல்ல புன் சிரிப்பிற்காக! அந்தப் புன் சிரிப்பிலே எவ்வளவு பெரிய பயங்கரமான புரட்சிப் பொறி பறந்தது தெரியுமா? செர்கியஸ் கோமகனைச் சாக அடித்தான் தான்சாவதற்குச் சிரித்தான்! சமுதாயம் தன்னை மறக்காது என்றதிருப்தி—ரஷ்யவரலாறு தன்னை ஒதுக்கிவிடாது என்ற நம்பிக்கை—இவைதாம் அந்த வாலிபனின் இதழோரப் புன்னகை சாவின் சிரிப்பு!

அந்தச் சிரிப்பு மறைவதற்குள் நாட்டிலே வேலை நிறுத்தங்கள் எழுந்தன. வேலை நிறுத்தத்திற்கு ஜார் அரசாங்கத்தால் வேட்டு வைக்க முடியவில்லை. அரசாங்கம் திணறியது. எட்டு மாத காலம் வேலை நிறுத்தம் வெற்றிகரமாக வாழ்ந்தது. ஜப்பானுடன் சமர் செய்த ரஷ்யா சரண் புகுந்தவேளையது. ஜன சமுதாயம் ஜார் ஆட்சியைக் காரி உமிழ்ந்தது. புரட்சி வளர்ந்தது. 1906-ம் ஆண்டில் ‘டூமா’ கூடிற்று. சீர்திருத்தங்கள் சில செய் அந்த ‘டூமா’ விரும்பியது. டூமாவின் சிருஷ்டிகர்த்த ஜார்!...... சிருஷ்டிகர்த்தாவே டூமாவைச் சிதைத்தான். காரணம்; அது நல்லவை செய்ய எண்ணியதுதான். டூமா என்றால் ஜனப் பிரதிநிதி சபை என்று பொருள் இது ஜாருக்குப் பிடித்திருந்தால்லெனின் பிறந்திருக்க வேண்டியதில்லை. 1907ல் டூமாவுக்குத் தேர்தல் நடைபெற்றது.

ஜாரின் வால்பிடிப்போர் வெற்றி பெற்றுங்கூட...அவர்கள் வாயிலும் தப்பித்தவறி நல்ல பேச்சுக்கள் வந்துவிட்டன. இரண்டாவது டூமாவும் இறந்தது. இல்லை...சாகடிக்கப்பட்டது ஜாரால்!

வயது வந்த எல்லோருக்கும் ஓட்டுரிமை இருப்பது ஜாருக்குப் பிடிக்கவில்லை; மேல் அந்தஸ்தினருக்கே ஓட்டுரிமை அளித்து மூன்றாவது டூமாவுக்குத் தேர்தல் நடத்தினான். அது ஐந்து ஆண்டுகள் உயிரோடிருந்தது. 1912-ல் நான்காவது டூமாவின் தேர்தல்: அது முதல் ஜார் ஆட்சியின் அடிப்பீடம் ஆடத் தொடங்கியது.

அரசன், அறிவை விலை கேட்பவன் ஆண்மை எந்தக் கடையில் விற்கும் என விசாரிப்பவன். ஆனால் அக்கிரமத்தின் மொத்த வியாபாரியாக விளங்கினவன். தன் மனைவியின் தளிர்க்கரங்களே அவனுக்குச் செங்கோல்!...அவளது அந்தப்புரமே அவனது சபாமண்டபம் லீலா விநோதங்களே அவனுக்குச் சட்டபுத்தகம் மதுவுண்ட மந்தியைத் தேள் தீண்டிடுவதுபோல், ரஸ்புடீன் என்ற மதவாதி அவனை நெருங்கினான் ரஸ்புடீன்-ஜாரின் மனைவி இருவரும்கிழித்தகோட்டை ஜார் தாண்டுவதில்லை. ஜார் மனைவியும் ரஸ்புடீனும் ரஷ்யாவின் மங்கையர்க்கரசியும்-குலச்சிறையுமானார்கள் ஜார் சாய்ந்ததற்கு இவர்களே பூகம்பமாயினர் கொடுமை தாண்டவமாடிற்று. அணையப்போகும் விளக்காக ஆயிற்று அது!... போல்ஷ்வெக் கட்சியினர் தூக்கில் தொங்கினார்கள். புரட்சி புகைய ஆரம்பித்தது.

அது எரிமலை என்பதை அந்த ஏமாளி மன்னன் உணரவில்லை. அதே நேரத்தில் 1914 வந்தது. உலக மகாயுத்தத்தின் கோரைப் பற்கள் நீட்டப்பட்டன. கூரிய நகங்கள் எட்டிப் பார்த்தன போரில் கலந்துகொண்ட ரஷ்யா 1915 ல் டானனென்-பெர்க்கில் ஜெர்மானியரிடம் படுதோல்விகண்டது. துவண்டுபோன மன்னன் ஒரு புது மந்திரிசபை அமைக்க எண்ணினான். அந்த எண்ணத்தை வளரவிடாமல் தீய்த்துவிட்டனர். மன்னன் மனைவியும்-மாபாதகன் ரஸ்புடீனும்.

1916-ல் மன்னன் குடும்பத்தில் மற்றொரு கொலை 1905-ல் தூக்கு மேடையில் சிரித்தானே ஒரு சிங்கக்குட்டி...அவன் சிரிப்பின் எதிரொலி 1916-ல் ரஸ்புடீனைச் சுட்டுக்கொன்றது, அடக்குமுறை குமுறிற்று, புரட்சியும் கொந்தளித்தது.

போர்முனையிலே ஜார்! இங்கோ புரட்சிக் கொடியைப் பெண்கள் பறக்கவிட்டனர் 1917 மார்ச் எட்டாம் நாள்!

ரஷ்யத் தலைநகரம் கிடுகிடுவென நடுங்கிற்று. யுத்தகளத்திலிருந்தபடியே உத்தரவிட்டான் ஜார் ‘சுட்டுத்தள்ளுங்கள்’ என்று

யார் யாரைச் சுடுவது? எரிமலைகள் பொங்கிவழியும்போது அதை எதிர்க்க எண்ணெய்க் கிணறுகளா?

தானே நேரில் புறப்பட்டான் ஜார்! அவன் வந்த புகைவண்டிக்குப் பாதைகிடையாது. நாடாண்ட மன்னுதி மன்னனின் கதி...இதுவென ஏங்கினாள் ஜாரின் மனைவி. காடாளும் காண்டாமிருகமவன் என கர்ச்சனைபுரிந்தது மக்கள் உள்ளம். ஜனப் பிரதிநிதி சபையின் அவசரக் கூட்டம் கூடியது. புரட்சியை அடக்க ஒரே வழிதான் தெரிந்தது அவர்கட்கு அதுதான் “ஜார் அரசனின் முடிதுறப்பு வைபவம்”.

ரோமனால் அரசவம்சத்திற்கே அன்றுதான் முடி துறப்பு விழா. முதலாளி—மதவாதிவர்க்கத்திற்கே அன்று ரஷ்யாவில் இடுகாடு கட்டப்பட்டது புதிதாக. சாகாவரம் பெற்றிருந்த முதலாளி மதவாதிக் கூட்டங்கள் சிரஞ்சீவிப்பட்டத்தை யிழந்து, சிதையில் ஏற்றப்பட்டன,

(11-ம பக்கம் பார்க்க)

தோழர் ஜே. வி. ஸ்டாலின் அவர்களை, மாஸ்கோ மின்சாரத் தொழிலாளர்கள், மாஸ்கோ ரிஜினல் சோவியட்டின் டெபிடியாக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்க தொழிலாளர் ஒன்று கூடிய காட்சி. ஸ்டாலின் உருவப்படம் அமைந்த மேடை மீது தொழிலாளர் தலைவர்கள் நின்றிருப்பதை காணலாம்.

விசித்திர தலைவர் லெனின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றனர் என்றே அவனுக்குப் புரியவில்லை. செய்வதறியாது திகைத்து முடி துறந்தான். மந்திரி சபை ஏற்பட்டது. அது வீழ்ந்து மற்றொரு மந்திரி சபையும் ஏற்பட்டது. மக்களின் குறைகள் தீரவில்லை. எனவே கூக்குரலுக்குப் பதில் சொல்ல முடியாது மந்திரிகள் திகைத்தனர். நெருக்கடியைத் தீர்க்க வழிவேண்டி மக்கள் நின்றனர். சமாதானம் வேண்டும் என்று போர் வீரர்கள் புழுங்கினர் கடைசியாகப் பதில் வந்தது. மன்னர் பரம்பரையிடமிருந்தல்ல, மதக்குருமாரிடத்திருந்தல்ல, மந்திரி சபையிடமிருந்தல்ல, புதிய குரல் நம்பிக்கை யூட்டுவதா யிருந்தது புரியும் வகையில் இருந்தது "சண்டை தீரும், உணவு கிடைக்கும், உழவர்களுக்கு நிலம் சொந்தமாகும்." இது வயலோரத்திலும், ஆலைக்குள்ளும், போர் முனையிலும், கடைவீதியிலும் கஷ்டப்பட்ட மக்களின் குறைகளைத் தீர்ப்பதாகவிருந்தது.

1917 நவம்பர் 8-ந் தேதி காலை கடிகாரம் 8-40 காட்டியது. கூடியிருந்த மக்களிடை பரபரப்புண்டானது. கடல் முழுங்குவது போன்ற ஆரவாரம். 'லெனின்', 'லெனின்' என்றசொல் ஒவ்வொருவர் உதட்டிலும் தவழ்ந்தது. உள்ளமான உருவம், வழுக்கை குழுந்த பெரிய தலை, சிறிய கண்கள், அமிழ்ந்த மூககு, கனமான முகவாய், அகன்ற உதடுகள், தாடி எடுக்கப்பட்ட நிலை. உடைகள் அழுக்கேறியிருந்தன. கால்சட்டை தொளதொளவென்றுப் பெரிதாகவிருந்தது. மக்களின் தலைவன் என்று ஏத்திப் புகழ வேண்டிய அளவுக்கு எதுவும் காணப்படாததால் வெளிநாட்டு நிருபர்களுக்கு ஆச்சரியத்தை அளித்தது. விசித்திரமான தலைவன்!

புரட்சியின் பொழுது உலக அரங்கில் லெனினின் உருவம் தோன்றியது. இது முன்னறிவிப்பின்றி, திடீரென்று காணப்பட்ட போதிலும், புரட்சியின் வருகையும் அதில் தனது கட்சியின் பங்கும் லெனினால் முன்னதாக வரையறுக்கப்பட்டவையே புரட்சியில் எத்தகைய நெருக்கடிகள் வரும் உடனடியாக எந்த மாறுபாடுகளைச் செய்யவேண்டும், புரட்சி வெற்றி பெற்றதும் அதைப் பாதுகாத்துப் பலப்படுத்துவது எவ்வாறு, இவைகளையெல்லாம் முன் கூட்டியே லெனினும் அவரது கூட்டமும் ஆலோசித்திருந்தன. அதனால்தான் பாரைக் குலுக்கும் பெரும் மாறுதல்களைப் பத்து நாட்களில் செய்ய முடிந்தது.

லெனின் அரசியலில் கவனஞ் செலுத்தியபொழுது சமதர்மக் கருத்து அங்குமிங்குமாகப் படித்தவர்களிடை மாத்திரம் பரவியிருந்தது. உயர்தரத் தத்துவம் என்ற வகையில் வேதாந்த விசாரணையுடன் அது நின்றது, நடைமுறையில் வரும் என்பதற்கான ஆதரவு அதிகமில்லை. கல்வியின்மை, மத மூடநம்பிக்கைகள், பரம்பரை பரம்பரையாகக் குடிகொண்டுள்ள [illegible] மனப்பான்மை, இவைகளால் புதிய கருத்துக்கள் பாமரர்களிடம் பரவவில்லை. உணர்ச்சி மிக்க வாலிபர்கள் இத்தடைகளை உடைத்தெறிய முன்வந்தனர். கிராமங்கள் தோறும் உழவர்களுக்குச் சமதர்மத்தைப் பற்றிச் சொன்னார்கள். அவர்கள் நினைத்தபடி பழமையின் தடைகளை அவ்வளவு சீக்கிரத்தில் உடைத்தெறிய முடியவில்லை. மாறாக அதன்மீது மோதி உள்ளம் உடைந்து திரும்பினர். பிரசார வேலையில் சலிப்படைந்ததும் பயங்கர வேலையில் ஈடுபட்டனர். பயங்கரவாதிகளின் இயக்கம் பரவியது. அதைத் தடுக்க சர்க்கார் எவ்வளவோ பாடுபட்டனர். சர்க்காரின் அடக்குமுறைக் கண்காணிப்பையும் மீறிப்பயங்கரவாதிகள் தங்கள் வேலைகளை நடத்தினர் 2-வது அலெக்சாண்டர் என்ற ஜார் மன்னன் கொலை செய்யப்பட்டான். சர்க்காரின் கொடுமை அதிகரித்தது. தூக்குமேடை, சைபீரியா இரண்டும் தங்கு தடையின்றி உபயோகப்படுத்தப்பட்டன.

ஆயிர மாயிரமாக வாலிபர்களின் கூட்டம் கற்கோட்டைகளுக்குள் சிதைந்தது. சிவந்த கண்கள் இருட்டறைகளில் ஒளியிழந்தன. ஆவேசப் பேச்சை அள்ளி வீசிய வாய்களில் மண் அடைக்கப்பட்டது துப்பாக்கி, வெடிகுண்டு உதவியால் ஜார் மன்னனையும் சர்க்காரையும் ஒரே இரவில் கவிழ்த்துவிடுபவர்கள் போல ஓடியாடி வேலைசெய்த உடலங்கள் தூக்குமேடைக்கருகில் அசைவற்றுக் கிடந்தன. இறப்பாவது ஒருவனின் உயிரையும் உணர்வையும் அழித்துவிடுகிறது. ஆனால் உயிருடன் வைத்துச் சித்ரவதை செய்தது சைபீரியா.

ஆயிரக்கணக்கான மைல் தூரமுள்ள பனிப்பாலை. உலகிலேயே மிகக் குளிருள்ள பிரதேசங்களை உடையது. தண்ணீர் 10 டிகிரியில் பனிக்கட்டியாகிற தென்றால் அதற்கும் கீழே 40, 50 டிகிரி குளிர் இருக்கும். 'சைபீரியா' அந்தப் பெயரைக் கேட்டாலே மனம் மரத்துவிடும். சாவு, சைபீரியா இரண்டில் சாவைத்தான் எல்லோரும் தேர்ந்தெடுப்பார்கள். ஜாரின் கொடுங்கோன்மையை எதிர்க்கத் துணிவுகொண்டவன், புரட்சிஇயக்கத்தில் சேர விரும்புவன் சைபீரியாவுக்குத் தன்னைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும். தீவிரப் புரட்சிவாதியாயிருந்தால் கூட அவனது உணர்ச்சிக் கனல் பனிப்பாலையில் குளிர்ந்துவிடும். ஒரு பக்கத்தில் துப்பாக்கி, இருட்டறை, கற்கோட்டை, தூக்குமேடை; மற்றொரு பக்கத்தில் பனிப்பாலை.

பளபளப்பான ஆயுதம் வைத்திருந்தான், மன்னனின் பெயரை மரியாதையின்றி உச்சரித்தான், மதக்குருமார்க்கு மதிப்பளிக்கவில்லை, கிராமங்களில் உலாவுகிறான், படபடக்கப் பேசுகிறான். பாமரர்களிடம் பழகுகிறான், படித்தவன் எழுத்தாசிரியன் இவைகளில் ஏதாவது ஒரு குற்றத்தைச் செய்திருந்தால் போதும். பனிப்பாலைக்குப் பயணம் ஆரம்பமாகும்.

லெனினின் குடும்பம் கஷ்டங்களின் குடியிருப்பு. லெனினின் தமையனுக்குத் தூக்குமேடை கிடைத்தது. லெனினுக்குச் சைபீரியாப் பயணம் வந்தது ஜார் மன்னனைக் கொலைபுரியச் சதி செய்ததாக லெனினின் தமையன் அலெக்சாண்டர் தூக்கிலிடப்பட்டான், அப்பொழுது லெனினுக்கு வயது 17. அலெக்சாண்டன் சாவு குடும்பத்தை இடிபோலத் தாக்கியது. ஊர் நிந்தனையும் போலீஸ்கண்காவலும் லெனின்மீது விழுந்தன.

தமையன் தூக்கிலிறந்தது அதிர்ச்சியை உண்டாக்கியபோதிலும், தனிப்பட்டவர்களைக் கொலை செய்வதன்மூலம் சமூக அமைப்பை மாற்றியமைக்க முடியும் என்ற நம்பிக்கை லெனினுக்கு ஆரம்ப காலத்திலேயே அகன்றுவிட்டது.

ருஷியப் புரட்சி இயக்கத்திற்கு லெனின் செய்த சேவை சிதறிக் கிடந்த புரட்சியாளர்களைக் கட்சி ரீதியில் ஒன்று திரட்டியது. அவருடைய முயற்சியால் மத்திய அமைப்பு உண்டானது இயக்கம் வலுவடைந்துவருகிற நேரத்தில், சர்க்காருக்கும புரட்சி இயக்கத்தினருக்கும 1905-ல் மோதுதல் நிகழ்ந்தது. அதில் இயக்கவளர்ச்சி கட்டுப்படுத்தப்பட்டது. 1905-ல் நடந்த ருஷியப் புரட்சி தோல்வியடைந்ததும் புரட்சிவாதிகள் மனமுடைந்தனர். இயக்கத்திற்குள் பல கட்சிகள் உண்டாயின; அமைப்பு சிதறியது. அடக்குமுறை உச்சநிலையடைந்தது. மன்னனும் மந்திரிகளும் வஞ்சந் தீர்க்க முற்பட்டனர். கொடுமையின் கோரவுருவம் குடிமக்களை ஆட்டிப்படைத்தது. விசாரணை எதுவுமின்றி ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் தூக்கிலிடப்பட்டனர். எழுபதாயிரம் பேர் சிறையில் தள்ளப்பட்டனர். போராட்டத்தில் இறந்தவர்கள் பதினாலாயிரத்துக்குக் குறையாது. அப்பொழுது லெனின் காட்டிய உறுதிதான் பிரமிக்கத்தக்கது. தோல்வி, எல்லாவற்றிற்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டதாகக் கருதவில்லை. கட்சியின் குறைபாடுகளை நீக்கவும், சிதைந்த பகுதிகளைச் செப்பனிடவும் முற்பட்டார். லெனின்.

தோல்வி, வெற்றி இரண்டும் கண்களை மறைத்தல் கூடாது. 1917-ல் புரட்சி வெற்றி பெற்றபொழுது, நிதானத்தைக் கைவிடாமல் வெற்றியை நிச்சயமாக்கும் பணியில் ஈடுபட்டார். லெனின்.

லெனின் வாழ்ந்தது ஐம்பத்திரண்டு ஆண்டுகள். அதில் இளம் பருவம் கழிய, 34 ஆண்டுகளையும் அரசியல் போராட்டத்தில் செலவிட்டார். அதில் பெரும் பகுதி, சைபீரியாவிலும், அயல் நாடுகளிலும் கழிந்தது. சுதந்திர மனிதனாக—ருஷியாவின் ஒப்பற்ற தலைவனாக ருஷியாவில் உலவியது ஐந்து ஆண்டுகளே.

லெனின் இறந்து 27 ஆண்டுகளாகின்றன. லெனின் மறைந்ததும் அவரால் நிர்மாணிக்கப்பட்ட அரசியலமைப்பு சிதறிவிடும் என்று பலர் நம்பினார்கள்; விரும்பினார்கள் மாறாகச் சோவியத் அமைப்பு உலகிலேயே பலமுள்ள அரசாக விளங்குகிறது. நாசிச வெறியினின்றும் உலகைக் காத்தது சோவியத் நாடே அமைதி வளம் செழித்தோங்குகிற நாடாக மட்டுமல்ல, இரண்டுக்கும் அடையாளமாகவுள்ளதும் ருஷியா தான். லெனின் போட்ட திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்படுகின்றன லெனின்காட்டியவழிதான் சிறந்தது என்பது உலகுக்கு நடைமுறையில் காட்டப்பட்டுவிட்டது.

லெனின் வெற்றியடைந்தது உலக வரலாற்றிலேயே ஆச்சரியமான பகுதி. ஆடம்பரமான வரவேற்போ, அபரிமிதமான செல்வாக்கோ பெறாத காலம். மூளை பலம் ஒன்று தவிர பத்திரிகை பலமோ பணவசதியோ கிடையாது. லெனினைப் போன்ற சாயல் இருந்தால்கூட போதும் போலீசின் கடுபிடிக்கு ஆளாக நேரிடும். வீதியிலே அச்சமின்றி உலவமுடியாது, மாறுவேடத்துடன் மறைந்து திரிய வேண்டும். இரவு தங்கிய இடத்தில் காலையில் தங்க முடியாது. பக்கத்துத் தெருவுக்குப் போவதென்றால்கூடச் சுற்றி வளைத்துவரவேண்டும் ஆபத்து அதிகரித்தால் அயல் நாடுகளுக்கு ஓட்டம். லெனினைப் போன்று சஞ்சலமும், சங்கடமுமடைந்த அரசியல் தலைவர் வேறு எவரும் இருந்திருக்க முடியாது. தலை நீட்டினால் மலர்மாலையல்ல, கொடுவாள் தடவும் காலத்திலும், கட்சியினுள் பிரிவும் தோல்வி மனப்பான்மையும் தலைதூக்கிய நேரத்திலும், புரட்சிக்குப் பின் ஏகாதிபத்தியங்களின் கட்டுப்பாடு, பொருளாதாரச் சீரழிவு, உள்நாட்டுக் கலகம் இவைகளையும் லெனின் ஒருவரால்தான் சமாளிக்க முடிந்தது.

லெனினடைந்த வெற்றி, போர்க்களத்திலல்ல. காடு மலை கடந்து கோட்டை அகழிகளைத் தூர்த்து திடீர்த் தாக்குதல்களால் பெரு வெற்றி கண்ட மாவீரர்களைப் போன்று அவர் புகழடையவில்லை. துப்பாக்கி தூக்கியறியாத கரம் அவருடையது.

மக்களின் கவனத்தை இழுக்குமளவுக்கு ஆவேசப் பேச்சுகளால் அரசியல் உணர்வு உண்டாக்கும் சொற்பொழிவாளரல்லர் அவர்.

உயர்தர இலக்கியத்தின் மூலம் அழியாத புகழ் பரப்பும் இலக்கிய ஆசிரியர்கள் பட்டியில் லெனினைச் சேர்க்க முடியாது.

வாதிடுவதில் வல்லவரல்ல அரசியல் ஞானியல்ல, அந்தராத்மாவுடன் பேசியவரல்ல.

சாதாரண மனிதர். பதினைந்து கோடி மக்களிடையிருந்து கிளம்பியவர். மக்களுக்காகப் பாடுபட்டவர்; மக்களை என்றும் அலட்சியப் படுத்தியதில்லை. அவர்களின் மன வேறுபாடுகளையும், கஷ்ட நஷ்டங்களையும் உணர்ந்தவர். வரலாற்றை நன்கு படித்தார். வர்க்க வேற்றுமைகள் வளர்ந்ததை உணர்ந்தார். சமூக நோய் பிறந்த விதத்தை உணர்ந்ததால்தான் நோய் தீர்க்கும் முறையை எளிதில் கையாளமுடிந்தது. புத்தகத்தைப் படித்து, நாட்டின் நிலையுணராது புத்தகத்தின் படி நடக்க விரும்பவில்லை. தாம் கற்றவைகளைக் கொண்டு புதுநிலைக்கேற்ப புது வழிகளை அமைத்தார். மக்களுக்கு மதிப்பளித்த முதல் அரசியல் தலைவர் அவர்தான். மக்களின் ஆக்கவேலையில் அசையாத நம்பிக்கை. மக்களுக்குப் பாடம் போதிப்பது மட்டுமல்ல, மக்களிடமிருந்தும் பாடங்களைக் கற்றுக் கொண்டார். அதுதான் லெனின் வெற்றி அடைந்ததற்குக் காரணம்.

பாலே நிலம் பைஞ்சோலேயான விந்தை

துர்க்மேனியா என்பது சோவியத் யூனியனின் தென்கோடிப் பகுதியில அமைந்துள்ள நாடு. சோவியத் குடியரசு நாடுகளான 16-ல் இது ஒன்றுதான் மிகுந்த வெப்பமுடைய நாடு ஓர் ஆண்டில் 300 நாட்கள் இங்கு முதுவேனிற் காலமாக இருக்கும். மழைக்காலமும் வசந்தகாலமும் இங்கே மிகக் குறைந்த நாட்களேயுடையதாகும். குளிர்காலத்தில்கூடப்பகலெல்லாம் கடும் வெயில் காயும். இரவில் பனி பெய்யும்அதுவும் உடனேநிலத்தின் வெப்பத்தால் உலர்ந்துவிடும் மழைக் காலத்தில் கடுமழை பெய்வதென்பது மிக அபூர்வம். நிலமே எங்கும் வறட்சியானது; கருமணல் நிறைந்தது. காரணம் துர்க்மெனியா நாடு காரக்கும் பாலேவனத்தில் அமைந்திருக்கிறது.

துர்க்மென் சோவியத் குடியரசு இந்தப் பாலேவனத்தில், ஏறக் குறைய 6,06,300 சதுரமைல் பரப்புடைய நாடாக அமைந்திருக்கிறது. இதன் மக்கள் தொகை 12½ லட்சமாகும்.

இந்த நாடு மிகப் பழங்கால முதலே பஞ்சத்தால் தவித்துக் கொண்டிருந்த நாடு. நிலத்தில் விளேச்சலே இல்லாதபடியால், ஒரு துண்டு ரொட்டிக்கும் இந்நாட்டில் பெரும் பஞ்சம் இருந்து வந்தது. ஆங்காங்கு ஒரு சில புல் வெளிப் பிரதேசங்களில் விளேயும் பேரீந்து, கோதுமை முதலியவையே இம்மக்களின் உணவு.

மேலும் இந்த நாட்டை அரபிகளும், செங்கிஸ்கான் கூட்டத்தாரும் பாரசீக ஷாக்களும், ஆப்கானிய அமீர்களும் அடிக்கடி தாக்கி, துர்க்மேனியாவிலிருந்த கலேவளம் நிரம்பிய இரண்டே நகரங்களேயும் பாழாக்கி விட்டார்கள். இந்நாட்டில் ஓராண்டு முழு அமைதி நிலவியிருந்ததென்றால் இரண்டாண்டு போராட்டமும் குழப்பமும் பஞ்சமுமாக இருக்கும். இயற்கையும் இந்நாட்டுக்குச் சாதகமாக இல்லே. ஆக எல்லாவகையாலும் கடந்த பல நூற்றூண்டுகளாகவே இந்நாடு அழிந்து கொண்டே வந்திருக்கிறது.

இந்நாட்டினூடே ஓடும் அமுடர்யா ஆறு கரைகளே யரித்தும் திசைமாறியும் ஓடி, இந்நாட்டினருக்குச் சற்றும் பயனில்லாமல் ஏரல் கடலில் போய்க் கலந்துவிடுகிறது இந்து குஷ்மலேயின் வடசரிவில் உற்பத்தியாகிச் சற்றேறக் குறைய 3160 மைல் தொலேவு ஓடி ஏரல் கடலில்கலக்கிறதென்றாலு', இவ்வாறு துர்க்மெனில் புகுந்து தான் ஓடுகிறதென்றாலும் இந்நாட்டிற்கு இவ்வாற்றால் யாதொரு பயனும் ஏற்படவில்லே. காரணம் துர்க்மென் நாட்டின் 5-ல் 4 பாகம் காராக்கும் பாலேவன மணலால் ஆனது. எனவே, ஆற்றின் நீர் வேகமாக ஓடுவதும், அந்தச் சமயத்தில் உலர்ந்து கிடக்கும் மணலில் நீர் சற்றுச் சுவறிப் போவதும்

மணற்காடு வெள்ளக் காடாக மாறியது

ரஷ்யர்களின் அதியற்புத முயற்சி

புலவர் பு. செல்வராசன்

(தலேமைத் தமிழாசிரியர், C. A. H. H. M. உயர்நிலேப்பள்ளி)

தவிர, மீதி நீர் ஓடிப்போய் ஏரல் கடலில் விழுந்துவிடுகிறது.

இந்நாட்டிலே "ஒயஸிஸ்" எனப்படும் வளமுள்ள வளர்தரப் பகுதிகள் மிகச்சிலவாதலின் ஆங்குள்ள மக்கள் கூட்டம் கூட்டமாக ஒயஸிஸ் பகுதிகளில் வாழ்வதும், தண்ணீருக்காக, ஒரு கூட்டத்தார் மற்றொரு கூட்டத்தாருடன் போரிடுவதுமாகவே அவர்கள் வாழ்க்கை நடைபெற்று வந்தது.

அப்பாலேவனத்தில் உஜ்பாய் எனும் பெயருடன் வரண்ட வாய்க்கால் ஒன்றும் இருக்கிறது. அந்த வாய்க்காலுடன் அமுடர்யா ஆற்றை இணைத்து விடுமாறு துர்க்மென் நாட்டு மக்கள் அந்தக் கால ஜார் மன்னர்களிடம் தூதனுப்பி விண்ணப்பித்தும் பலன் கண்டார்களில்லே.

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ரஷ்ய நாட்டு மக்கள் வெற்றிகண்டவீரன் தோழர் ஜே. வி. ஸ்டாலின் உருவச் சிலேயை போர் வெற்றி விழா கொண்டாட்ட தினத்தன்று திறந்து வைத்து வணக்கம் செலுத்தினர்.

ரஷ்ய விஞ்ஞானிகளும் இஞ்சினியர்களும் துர்க்மென் சென்று சோதனைகள் நடத்திப் பலவகையில் முயன்றும் பலன் விளேயவில்லே. அமெரிக்கரும் இத்துறையில் முயன்றனர். ஆனல் ஜார் அரசாங்கமோ, அமெரிக்க அரசாங்கமோ, மணற்காட்டையோ, வேகமாய்ப் பாய்ந்தோடிப் பாழாகும் அமுடர்யா ஆற்று நீரையோ பலனுடையதாக்க முடியவில்லே.

ரஷியாவில் ஜார் ஆட்சியைத் தொலேக்க நடந்த அக்டோபர் புரட்சியில், துர்க்மென் மக்கள் லெனினுக்கு உதவியாக இருந்து புரட்சி வெற்றிகரமாக நடக்கஉதவி செய்தபடியால், புரட்சித் தீ முற்றிலும் அடங்கா முன்னரே, சோவியத் ஆட்சித் தலேவர்கள், துர்க்மெனில் அபிவிருத்தித் திட்டங்களே நடத்த முனேந்துவிட்டனர்.

சோவியத் ரஷ்யர்களின் முயற்சியினல், புதிய வாய்க்கால்கள் பல அந்தக் கடு மணற்காட்டில் வெட்டப்பட்டன. மூர்காப் நீர்ப்பாசனத் திட்டம் உருவாக்கப்பட்டது. அமுடர்யா ஆற்றிலிருந்து இரண்டு பெரிய வாய்க்கால் வெட்டப்பட்டு மற்ற வாய்க்கால்களுடன் இணேக்கப்பட்டன. மணலிலேயே சுவறிப்போய்க்கொண்டிருந்த டெஜன் எனும் சிற்றாறும் இந்த வாய்க்கால்களுடன் இணேக்கப்பட்டு, டெஜன் பள்ளத்தாக்கில் பாயுமாறு திருப்பிவிடப்பட்டது.வேகமாகஓடிப்போய் ஏரல் கடலில் விழுந்த அமுடர்யா ஆற்றுநீர் அணேக்கட்டின் மூலம் தேக்கி நிறுத்தப்பட்டு வாய்க்கால்களில் பாய்ந்தோடுமாறு செய்யப்பட்டது.

இந்த அற்புத வேலேக்காகச் சோவியத் ரஷ்ய இஞ்சினியர்களும் விஞ்ஞானிகளும், பிறநில தத்துவ ஆராய்ச்சியாளரும் துர்க்மெனில் வந்து குழுமினர். பலஅற்புதஇராக்கதஇயந்திரங்கள்வரவழைக்கப்பட்டன. இவற்றின் மூலம் அம்மணற்காடு வெள்ளக்காடாகி, காராக்கும் பாலேவனப், எங்குப் பார்த்தாலும் வாய்க்கால்களும் நீர்த்தேக்கங்களுமாக பாறி, இதன்பயனுகப் பருத்தி விளேயும் நிலங்களாகவும், ஆப்பிள், பியர், பழத்தோட்டங்களாகவும், திராட்சைத் தோட்டங்களாகவும், கோதுமை வயல்களாகவும் மாறிக் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டது. ஒன்றும் விளேய முடியாத அம்மணற்காடு,இன்று ஆங்காங்கே பூஞ்சோலேகளும் நிறைந்து காட்சியளிப்பது விந்தையிலும் விந்தையாக இருக்கிறது.

இதனுடன் ரஷ்ய விஞ்ஞானிகள் நின்றுவிடவில்லே. உலகத்திலேயே இணேயற்று மிகப் பெரியதாக விளங்கும் சுமார் 1375 மைல் நீளமுள்ள கால்வாய் ஒன்றை அமைத்துக்கொண்டு வருகின்றனர். இந்த நீண்ட

10-ம் பக்கம் பார்க்க

மாலை மணி

சென்னை 1—5—51 செவ்வாய்க்கிழமை

பாட்டாளி மக்களே :: :: ஒரு சொல் கேளீர்!

"உலகம் உழைப்பாளிகளுக்கே;
உலுத்தர்களுக்கு அல்ல;
பிறன் உழைப்பை உண்டு கொழுப்போருக்கு அல்ல;
சுரண்டி வாழுவோருக்கல்ல; முதலாளித்துவத்துக்கு அல்ல;
ஆம்..."
"அதே பொருளில் தான், திராவிடநாடு திராவிடருக்கே;
ஆரியருக்கு அல்ல;
அண்டிப் பிழைக்க வந்து நம்மை மண்டியிடச் செய்த மதத் தரகர் ஆட்டத்துக்கு அல்ல;
வடநாட்டு முதலாளித்துவத்துக்கு அல்ல;
உழைக்கும் உத்தமர்களாகிய திராவிடர்களுக்கே" என்று கூறுகிறோம்.

மே தினத்தன்று பாட்டாளி மக்களுக்கு நாம் கூறும் செய்தி இதுதான்.

இது நம் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் அறிஞர் சி. என். அண்ணாத்துரை பாட்டாளி மக்களுக்கென விடுத்துள்ள அறிவுரை.

மே தினம் பாட்டாளி மக்களின் விடுதலையைக் குறிக்கும் நாள்; அவர் தம் துன்பத்தைத் துடைக்க வழிகாணும் நாள். இந்நாளில் பாட்டாளி மக்கள் ஒன்றுகூடி விழாக் கொண்டாடி அரிய சொற்பொழிவுகளைக் கேட்டு, உயர்ந்தக் கட்டுரைகளைப் படித்து உணர்ச்சிப் பெருக்கடைந்து ஒற்றுமைப்பட்டு, தீய சக்திகளைக் கருவறுக்க உறுதி கொள்ளுதல் வேண்டும்.

பாட்டாளி மக்களை அழுத்தி வைத்திருக்கும் சாதி சமய நிற வேறுபாடுகளுக்கு மே தினமாகிய இன்று இறுதி கண்டு, பாட்டாளிகளிடை அவை தோன்றாதவாறு ஆழக் குழி வெட்டி அவற்றை அக் குழியிலிட்டுப் புதைத்தல் வேண்டும்.

பாட்டாளி மக்களை என்றும் தலையெடுக்க ஒட்டாமல் அழுத்தி வருபவை விதி, வினை, கர்மபலன், ஜன்மபலன், நரகம், மோட்சம், சாஸ்திரம், கடவுள் போன்ற சில ஏமாற்றுச் சொற்களே யாகும். இச்சொற்களைக்கொண்டே பாட்டாளி மக்கள் பல்வேறு வகையான மூடத்தனங்களுக்கு இலக்காக்கப்பட்டு, இம்மூடப் படுகுழியிலிருந்து மேலெழ முடியாவாறு ஆழ்த்தி வைக்கப்பட்டிருக்கின்றனர்கள். இந்தச் சில மோசடிச் சொற்களே பாட்டாளி மக்களை ஒன்றுபட முடியாமற் செய்து வருகின்றனர்; முதலாளித்துவத்திற்கு என்றும், தலைமுறை தலைமுறையாய் அடிமைகளாகக் கிடக்குமாறு செய்து வருகின்றன.

தன்னிலை உயர வேண்டுமென்று விரும்புகிற பாட்டாளியிடம், முன் ஜென்மத்தின் கர்மவினை, விதிப்பயன் எனும் வார்த்தைகளைக் கூறி, பாட்டாளியின் விருப்பம் முளையிலேயே கிள்ளி எறியப்படுகிறது.

எனவேதான், மே தின விழாவிலே, இந்த மோசடிச் சொற்களின் மாய்கையிலிருந்து பாட்டாளி மக்கள் முதலில் விடுதலை பெற்றுவிட்டால், முதலாளித்துவத்திலிருந்து விடுதலை பெறுவது மிக எளிது என்று திராவிடர் இயக்கம் கூறுகிறது. கடவுள், மதம், சாஸ்திரம் என்பவை பிறவி முதலாளிகள். மக்களைப் பரம்பரையாக அடிமைப்படுத்திவரும் அக்கிரமம் நிறைந்த முதலாளிகள். இம்முதலாளிக் கொடுமையிலிருந்து பாட்டாளி இனம் விடுதலை பெற்றால், தன்னுணர்ச்சி ஏற்பட்டு அதன் பயனாகக் கட்டுப்பாடும் ஒற்றுமையும் தோன்றி முயற்சி மேலிட்டு பணக்கார முதலாளித்துவம்தானே ஓட்டம் பிடிக்கும் நிலைமை ஏற்படும்.

இதனை மனத்திற்கொண்டுதான் பாட்டாளி இனமாகிய திராவிடர் இனம் இம்மோசடிச் சொற்களின் மாய்கையிலிருந்து முதலில் விடுபடவேண்டும் என்று வற்புறுத்திக் கூறுகிறோம்.

பாட்டாளி இனம் திராவிட இனமே. உழைப்புக்கும் தொழிலுக்கும் உழவுக்கும் சிறப்பிடம் தந்து அவற்றை மேற்கொண்ட இனம் திராவிட இனமே ஆரிய இனம் உழவையும் தொழிலையும் இழிவென ஒதுக்கிய இனம்; உழைக்காமல் உல்லாச வாழ்வு வாழ வழிகோலிக்கொண்ட இனம்; எனவே முதலாளி இனம்; பிறவி முதலாளி இனம்.

தொழிலைச் சிறப்பித்த இனம் திராவிட இனம். எனவே திராவிட இனமே பாட்டாளி இனம். இப்பாட்டாளி இனத்தவர் சாதி, சமய, கடவுள், சாத்திர மாய்கையிலிருந்து விடுபடவேண்டும் என்று இன்று முதல் உறுதி செய்துகொள்வார்களாக.

நெசவாளர் மறியல் 15-ம் நாள்

ஆந்திரா காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில்

................(0)................

நெசவாளர் பிச்சை எடுத்தனர்

—————(:0:)—————

மனிதப் பண்புக்கு மாறாக நடக்கும் அரசாங்கம்

சென்னை, ஏப். 30—

இன்று, கிழக்குக் கோதாவரி, குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த 16 நெசவாளர் மறியலில் கலந்துகொண்டனர். இவர்கள் தங்கியுள்ள இடத்திலிருந்து சென்னைக் கோட்டை முன் மறியல் செய்ய இரு பிரிவாகச் சென்றனர்.

போலீசார் இவர்களைத் தங்கசாலை அருகில் தடுத்துக் கைது செய்தனர் அதுபோது நெசவாளர் மறியலைப் பார்த்துக்கொண்டிருந்த பொது மக்களைப் போலீஸார் தடியினால் தாக்கிக் கலைத்தனர்.

முன்னாள், ராஜாஜி ஹாலில் ஆந்திர மாகாண காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நடந்துகொண்டிருந்தபோது 70 நெசவாளர் தங்கள் நிலையை விளக்கிப் பிச்சையெடுத்தனர். அதுபோது ஆந்திர மாகாண காங்கிரஸ் பொதுக்குழு கூட்டத்திலிருந்த அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசியான காளா வெங்கட்டராவுக்கும், ஆந்திரா மாகாண காங்கிரஸ் கமிட்டித் தலைவரான சஞ்சீவ ரெட்டிக்கும், நெசவாளர் நிலை உணர்ந்து தங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமாறு அச்சடித்த நெசவாளர் நிலை கோரிக்கைகள் கொண்ட துண்டு வெளியீடுகளை வழங்கினர்.

பின்னர், அவ்விடத்தைவிட்டு மவுண்ட்ரோடு வழியாகப் பிச்சை எடுத்துக்கொண்டே மெரினா கடற்கரைவரை சென்றனர்.

அடுத்து அவர்கள் கடற்கரை போலீஸ் ஸ்டேஷன் அருகிலுள்ள ரயில்வேகேட்டிடத்தில் மாலை 6-30 மணிக்குக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் உணவின்றி இரவு 10 மணிவரைக் காவலில் வைக்கப்பட்டனர். பிறகு 10-30 மணிக்கு மேல் இரவில் நகரத்திலிருந்து 10 மைல்களுக்கப்பால் கொண்டுவிடப்பட்டனர்.

இன்று சில நெசவாளர் நகரத்தின் பல இடங்களில் பிச்சை எடுத்துக்கொண்டுள்ளனர்.

வாசகர்களுக்கு !

மே தின விழாவை முன்னிட்டு "மாலைமணி" மே 1, 2-தேதிகளில் வெளிவராது. 3-3-51 முதல் "மாலைமணி" வழக்கம்போல் வெளிவரும்.

—ஆசிரியர்.

தோழர் என். வி. நடராஜன் நாஞ்சில் மாவட்டச் சுற்றுப் பயணம்

20—4—51 வெள்ளியன்று மாலை 5-மணிக்கு, என். வி நடராஜன் அவர்கள் ஒழுகினசேரி, தி. மு. கழகத்தைத் துவக்கி வைத்தார்கள். தோழர் எ. ராமசாமி அவர்கள் தலைமை தாங்கினார்கள். தோழர்கள் வி. எம். ஜான், கி. மனோகரன் அவர்களது பேச்சோடு கூட்டம் இனிது முடிந்தது. கூட்டத்தை நடத்திய ஒழுகினசேரி வாலிப வீரர்களின் முயற்சி பாராட்டத்தக்கது. கூட்டம் முடிந்தவுடன் கழகத் தோழர்களும் அபிமானிகளும் ஊர்வலமாகப் புறப்பட்டு சுமார் 6-30 மணிக்கு முனிசிபல் மைதானத்தில் வந்து குழுமினார்கள்.

தோழர் வி. எம். ஜான் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். பி. சிதம்பரம் அவர்களின் மறைவிற்காக அனுதாபத் தீர்மானம் ஒன்றை நண்பர் கி. மனோகரன் பிரேரேபிக்க கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

காலிகளால் (திராவிட இயக்க எதிர்ப்பு முன்னணி) கூட்டத்தில் ஏற்பட விருந்த குழப்பம் கழகத் தோழர்களின் கூட்டு முயற்சியால் சமாளிக்கப்பட, கி. மனோகரன், என். வி. நடராஜன் முதலியோர் பேச; தோழர் வி. எம். ஜான் அவர்களின் முடிவுரைக்குப் பிறகு கூட்டம் சுமார் 9-30 மணிக்கு இனிது முடிந்தது.

இரணியல்

22-4-51 ல் இவ்வூர் தி. மு. கழகத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் தோழர் வி. எம். ஜான் தலைமையில் நடைபெற்றது. இதுவரை எந்த அரசியல் கட்சிக்கும் கூடாத அளவு பெரும் ஜனத்திரள் இதற்கென குழுமியிருந்தது. கூட்டத்தில் வி. எம். ஜான் கழக லட்சியத்தைப்பற்றி விளக்கமாக முகவுரையில் கூறியதற்குப்பிறகு, வை. சுப்ரமணியம் என். வி. நடராசன் இலட்சிய விளக்கத்தைப்பற்றி நீண்டநேரம் உணர்ச்சிகரமான சொற்பொழிவாற்றினர். கூட்டம் மிக அமைதியோடும் கட்டுப்பாட்டோடும் நடந்தது குறிப்பிடத்தக்கது. இரணியல் தோழர்களின் பெரு முயற்சி பாராட்டற்குரியதாகவே அமைந்திருந்தது.

வியர்வை விழா

[கே. ஏ. மதியழகன்]

மே முதல் நாள்! காலண்டரிலே தினந்தோறும் கிழிக்கப்படும் வெறும் நாளல்ல. மே தினத்திற்கு பின்புறம் மறைந்திருக்கும் வரலாறு மகத்தானது. பாட்டாளி மக்கள் தங்கள் உரிமைகளை அடைந்து தீருவதற்காக கொடிமரம் நாட்டிய புனித தினம் மேதினம். உழைத்து உழைத்து உருக்குலைந்து உழுத்தர்களுக்குக்கொட்டியழுதுவிட்டு உபத்திரவத்துடனும் வறுமையுடனும் தோழமை பூண்ட தொழிலாளத் தோழர்கள் சீறிப் போரிட்ட பொன்னாள் இந்த தினம். மே தினத்திற்கு பின்புறம் ஒரு நூற்றாண்டுக்கு மேலாக பாட்டாளி வர்க்கம் கடும்போரிட்டு, கஷ்ட நஷ்டங்களைத் தாங்கிக்கொண்டு, பெற்றுள்ள வெற்றிக்கோட்டைகளை நினைவூட்டுகிறது. உழைப்பதற்காகப் பிறந்தவர்கள் நீங்கள்—அந்த உழைப்பு உல்லாசமாக அனுபவிப்பதற்காகப் படைக்கப்பட்டவர்கள் நாங்கள், தரித்திரத்திலே புரள வேண்டியவர்கள் நீங்கள்—தகதகவென பிரகாசிக்கும் கனக மாளிகைகளிலே களிப்புக் கடலிலே குளிக்கவேண்டியவர்கள் நாங்கள்; உழைக்க வேண்டுவது உங்கள் கடமை—அதை உறிஞ்ச வேண்டியது எங்கள் உரிமை என்ற உன்மத்தக் கொள்கைகளுக்கு சவக்குழி அமைத்து, சகலரும் சமம், முதலாளி தொழிலாளியின் உழைப்பிலே உண்டு கொழுத்து ஊரை ஏமாற்றித் திரியும் முட்டாள் கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக உதயமான தினந்தான் மேநாள். மே தினத்தின் லட்சிய வெற்றிக்காக பல்லாயிரக்கணக்கான தோழர்களின் ரத்தம் அபிஷேகிக்கப்பட்டிருக்கிறது. பலர் சித்திரவதைக்கு ஆளாகியுள்ளனர். அடுக்கு முறையின் கோர நாக்கு பலரை ருசி பார்த்திருக்கிறது தூக்குக்கயிற்றை முத்தமிட்டோர், துப்பாக்கிக்குண்டுகளால் துளைக்கப்பட்டோர். தடியடிக்கு ஆளாகி தழும்புகளைப் பெற்றோர் ஒன்று, நூறல்ல ஆயிரமாயிரம் பேர்கள் அவர்களின் தியாகத்திலே பூத்ததுதான் ஏழை எளியவரின்புதுவாழ்வு அத்தகைய மாவீரர்களின் அற்புதச் செயல்களால் உலகமுதலாளித்வம்சட—சடவென முறிந்து விழும் தருணத்தை அடைந்துள்ளது. ஏழை எளியவரின் வாழ்வு துலங்க, உழைப்பவன் அதனை உண்டு மகிழ, அவன் பெண்டு, பிள்ளைகளுக்குப் பெற்றுத்தர வாழ்வின் இன்பத் துளிகளை அவனும் பருக, சுரண்டல் தன்மை ஒழிந்தாகவேண்டும். பிறரது வியர்வைத் துளிகளிலே தங்களது பரிமள வாழ்விற்கான பன்னீர்த்துளி அமைத்துக்கொள்ளும் படாடோப பணக்காரத் தத்துவம் தரைமட்டமாக்கப்படாத வரையிலே தரணியிலே தரித்திரச் சேற்றிலே சிக்கிச் சீரழிவோர்க்கு விடுதலை வாழ்வில்லை விமோசனமுமில்லை. அந்த லட்சிய நிறைவேற்றத்திற்கான உறுதியையும் எழுச்சியையும் அளிப்பது மே தினம். அகில உலகிலுமுள்ள தொழிலாளர் வர்க்கம் பெருமையுடனும் பூரிப்புடனும் இந்த மே தினத்தைக்கொண்டாடுகிறது முதலாளித்துவ முதலையைக் கொன்று குவித்து சமதர்ம முறையில் நாட்டைநடத்திச்செல்லும் ரஷ்யா, சீனா போன்ற நாடுகளிலே. அவர்கள் சாதித்துள்ள அரிய சாதனைகளை நினைவுபடுத்தி மகிழ முடியும் மகிழ்கின்றனர். ஆனால் நமமைப் பொறுத்தவரையிலே 4 வருட சுயராஜ்யம் சுகராஜ்யமாயில்லை. ஊராளவந்தோர் என்போர் நாட்டு க்களுக்கு அளித்ததெல்லாம், உணவு, உடை, ஒய்வு, உல்லாச வாழ்வு, படிப்பு, பண்பாடு அல்ல. அவர்கள் கொடுத்ததெல்லாம், துப்பாக்கிக் குண்டு, கண்ணீர் புகை, தடியடி, அவசரச் சட்டங்கள், சிறைத் தண்டனை, இரும்பு விலங்குகள், பஞ்சம், பட்டினிச்சாவு, வேலையில்லாத் திண்டாட்டம், வேதனை வாழ்வு இவைதான். இப்படிப்பட்ட கொடுங்கோலரை எதேச்சாதிகாரிகளை எதிர்த்து ஜனநாயகம் மலருவதற்காக போர்க்கோலம் பூண்டுள்ள சகலரையும் திராவிட முன்னேற்றக் கழகம் வாழ்த்துகிறது. வேறு எந்த மே தினத்தையும் விட இந்த மே தினம் விசேஷம் பொருந்தியது. உலகிலே போர் மேகங்கள் கவிழ்ந்துள்ள நேரம். மூன்றாவது உலக யுத்தம் எந்தக் கணத்தில் வெடிக்குமோ என்ற பயங்கர எண்ணம் எல்லோர் மனத்தையும் நடுக்குகிறது. அமெரிக்க ஆங்கில ஏகாதிபத்யங்கள் அதற்கு ஆல வட்டம் வீசுகின்றன இப்படிப்பட்ட ஆபத்து சூழ்ந்துள்ள நிலையிலேதான் மே தினம் வருகிறது. அமெரிக்க ஆங்கில முதலாளிகளின் ஏஜண்டுகளான, கைப்பாவைகளான வடநாட்டுக் கோடீஸ்வர முதலாளிகளின் பொருளாதாரப் பிடிப்பு திராவிடத்தை நெருக்குகிறது. வடநாட்டுக் கோடீஸ்வர முதலாளியின் கொள்ளை லாபத்திற்குச் சந்தைக்காடு திராவிடம். திராவிடத்தின் உரிமைப் புதல்வர்கள் தென்னாப்பிரிக்காவிலே மலானின் கொடுமைக்கு மத்தியிலே-சிங்களத்திலே சிங்களவலின சீற்றத்திற்கு நடுவே மலேயாவிலே வெள்ளை ஏகாதிபத்யத்தின் மமதைக்கு மத்தியிலே மானமிழந்து, மரியாதையிழந்து உயிர்வாழ வேண்டிய நிர்ப்பந்தம் உள்ளது. அவர்கள் வாழ்வு துலங்க திராவிடத்தைச் சுரண்டும் முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டாக வேண்டும். திராவிட நாட்டு விடுதலைப் போருக்கும் மே விழாவிற்கும் நிறைய தொடர்பிருக்கிறது. இந்த உண்மையை ஊருக்கு எடுத்துரைக்க வேண்டும். திராவிடத்திலே கொள் முதலை இல்லாமல் தங்கள் பித்தாலாட்டத்தையும் மக்கள் அறியாமையையும் கொள் முதலாக வைத்து சுரண்டல்வியாபாரம் நடத்தும் புரோகித முதலாளித்தன்மை இருக்கிறது. அதுவும் கருவறுக்கப்பட வேண்டும். சுரண்டல் எந்த ரூபத்தில் வந்தாலும் ஒழிக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்பட்டுளது எனவே மே தினம் புது வாழ்வு மலர்வதற்கான நெஞ்சுரத்தை, தியாகச்சிந்தனையை, செயலாற்றலை நமக்கு வழங்கும். மேதினத்தை திராவிடத்திலே முதன் முதல் கொண்டாடிய பெருமை சுயமரியாதை இயக்கத்தாராகிய நம்மையே சேரும். அப்படிப்பட்ட பெருமைக்குரிய நாம் சுரண்டலற்ற சமுதாயத்தை, சூதுகள் ஒழிந்த சமுதாயத்தை, சர்வாதிகாரம் தலைகாட்டாத சமுதாயத்தை பாட்டாளி தனது உழைப்பின் பயனை உண்டு அனுபவிக்கும் சமுதாயத்தை நிறுவும் புனிதப் பணியிலே நம்மை அர்ப்பணிப்போமாக. மே தினம், மாளிகைவாசிகளின் கேளிக்கைச் சிரிப்பொலியிலே, மகிழ்ச்சிக் கீதத்திலே, சங்கீதநாதத்திலே பிறந்ததல்ல; பஞ்சை பாரியின் கண்ணீர் அழுகுரலில், பெருமூச்சில், வியர்வைத் துளியில் உதயமானது. உழைப்பவனின் ஒவ்வொரு வியர்வைத் துளியும் "உலகம் உழைப்பவனுக்குத்தான் சொந்தம்" என்ற போதனையைத் தான் நமக்கு அறிவுறுத்துகிறது. அது கூறும் படிப்பினை அதுதான் மேவிழா வீணர்களின்விழாவல்ல. வியர்வை விழா. இந்த வியர்வை விழா வையகத்தின் வறுமை இருள் தொலைந்து வாழ்வு விடிவதற்கு விடிவெள்ளியாக அமையட்டும்.

ஏஜெண்டுகளுக்கு

ஏஜெண்டுகளுக்கு இம்மாத பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது பட்டியல் தொகை 7-5-51-க்குள் அனுப்பிவைக்கும்படி: கேட்டுக்கொள்ளுகிறோம்.

மானேஜர்

விளையாட்டு விழா

மதுராந்தகம் மையம் ஆரம்பப்பள்ளி விளையாட்டு விழா சனிக்கிழமை 23-4-51 பிற்பகல் 3-30 மணிக்கு நடைபெற்றது. அச்சமயம் தோழர் குன்னிகன்ன நம்பியார் எம் ஏ, (ஏ. எஸ்.) டிபுடி கலெக்டர் தலைமை வகித்தார்.

அனேக பள்ளிகள் விழாவில் கலந்துகொண்டன. காரியதரிசி தோழர் தேவகடாட்சம் விழாவின் ரிபோர்ட் வாசித்தார். தலைவர் பேசுகையில் விழாவின் முக்கியத்தை விளக்கினார். டிபுடி இன்ஸ்பெக்டர் தோழர் வேதகிரி பி. ஏ., பி. டி, வந்தனோபசாரம் கூறினார். சிற்றுண்டி பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டது.



சோவித்ரஷ்ய அரசாங்கத்தின் மத்தியக் காரியாலயம்.

வடார்க்காடு மாவட்டச் சொற்போர் மன்றம்

நாளது மே மாதம் 13-ந் தேதி தொடங்கி 17-ந் தேதி வரை ஐந்து நாள் சொற்போர் பயிற்சி 10 மாணவர்கட்கு அளிக்கப்படும். அதன் பின் 10 நாட்களுக்கு வடார்க்காடு மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்ய வசதி செய்து தரப்படும். பயிற்சியளிக்க இயக்க முன்னணி வீரர்கள் வருகிறார்கள். கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் 7-ந் தேதிக்குள் (7-5-51) அந்தந்த ஊர் தி. மு. க. செயலாளர்களின் அத்தாட்சிக் கடிதமுடன் விண்ணப்பித்துக்கொள்ள வேண்டியது. விண்ணப்பித்து கொள்ளும்தோழர்கள் போக்குவரத்துச் செலவுகளை, அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டும் இவ்விடம் உணவு மட்டும் இலவசமாக அளிக்கப்படும். சொற்பொழிவு மன்றம் திருவண்ணாமலையில் நடைபெறும்.

கே. சுப்ரமணியன்
செயலாளன்
(வடார்க்காடு தி. மு. க.)

பாலை நிலம்...

(7-ம் பக்க தொடர்ச்சி)

அகன்ற கால்வாயில் சிறு கப்பல்களும் போக முடியுமாம். இந்தக் கால்வாய் அமுடர்யா ஆற்றினை மூன்றிடங்களில் பெரிய அணைகள் கட்டித் தேக்கி விடுவதன் மூலமும், துர்க்மெனுக்கு வெளியே ஓடும் ஆறுகளுடன் இக்கால்வாயை இணைத்து விடுவதன்மூலமும், என்றும் வற்றாத நீர்வள முடையதாக விளங்குமாறு செய்து வருகின்றனர்

இந்த நீண்ட கால்வாயிலிருந்து மொத்தம் சுமார் 1500 மைல்கள் கணக்கிடக்கூடிய பல சிறு வாய்க்கால் வெட்டி நாடெங்கும் நீர் பரவுமாறு செய்யப்பட்டு வருகிறது. மேலும் சுமார் 1250 மைல் நீளமுடைய பெரிய அகன்ற குழாய்களை அமுடர்யா அணைக்கட்டு நீர்த் தேக்கத்தில் பொருத்தி நீண்ட தொலைவுள்ள, வாய்க்கால் போகாத இடங்களுக்குத் தண்ணீர் கொண்டு போகப்படுகிறது.

இவ்வாறு அமுடர்யா ஆற்றில் மகத்தான அணைகள் கட்டுவதனால் லட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்வதற்கான நிலையத்தையும் அமைத்து வருகின்றனர்.

துர்க்மென் பாலைவனத்தில் ஒட்டகங்கள் மீது மாதக்கணக்கில் கடக்கப்பட்ட தொலைவுகளை இனிமேல் கப்பல்கள் மூலம் 4 நாட்களில் விரைந்து சென்று கடக்க முடியும்.

ரஷ்ய விஞ்ஞானிகளும் இஞ்சினியர்களும் துர்க்மெனியா நாடெங்கும் பலவிடங்களில் கால்வாய்கள் வெட்டியதன் பயனாக, எண்ணெய், நிலக்கரி, உப்பு மற்றும் பலவகை தாதுப்பொருள்கள் நிலத்திற்கடியிலிருப்பதை அறிந்தனராதலின், அவற்றை எடுப்பதற்கான ஏற்பாடுகளையும் செய்துவிட்டனர். இவ்வகையில் எண்ணெய், நிலக்கரி, காந்தகம், பாஸ்பரஸ், வெடியுப்பு, அயோடைன், சோடியம்குளோரைடு, புரோமியம், சுண்ணக்கல், ஜிப்சம், சிமிட்டிக்குரிய மண் இன்னும் பலவகை தாதுப் பொருள்கள் எடுக்கப்படுகின்றன. இதற்கான புதிய தொழிற்சாலைகளும், மின்சார நிலையங்களும் ஆங்காங்கே ஏற்படுத்தப்பட்டுவிட்டன.

எங்கும் கடல் போன்ற நீர்த் தேக்கங்கள் மயமாகிவிடவே, மீன் வளர்ப்பதும் நீர்க்கோழிகள் வளர்ப்பதுமான தொழில்களும் பெருகிவிட்டன.

இந்தப் புதிய கால்வாய்களின் பயனாக, அந்த மணற்காட்டில் 70 லட்சம் ஏக்கர் நிலம் விளை நிலமாக்கப்பட்டிருக்கிறது. பெருவாரியான நிலம் பருத்தி விளைவுக்குட்படுத்தப்பட்டிருக்கிறது.

நீர்வளம் ஏற்பட்டுவிடவே பசும் புற்றரைகள் எங்கும் காணப்படுகின்றன. இதனால் கால்நடைகளை வளர்ப்பதும், அவற்றின் மயிர்களைக் கத்தரித்துக் கம்பளங்கள் நெய்வதுமான தொழிலும் வளர்ந்துவிட்டது,

இந்தப் பெரிய கால்வாய் மூலம் மத்திய ஆசியாவுக்கும் ஐரோப்பாவிலுள்ள சோவியத் ரஷ்யாவுக்குமிடை அமுடர்யா ஆறு, காஸ்ப்பியன்கடல், ஒல்கா ஆறு முதலியவற்றின் மூலம் கப்பல் போக்குவரத்து எளிதாக நடைபெறும், இதற்கேற்ப இந்தக் கால்வாய் காஸ்ப்பியன் கடல் ஒல்கா ஆறு முதலியவற்றுடன் இணைக்கப்படும்.

இவ்வாறு நாடு வளமுடையதாக்கப்பட்டதால், இப்போது புதிய நகரங்கள் நவீன விஞ்ஞான வசதிகளுடன், கூடியவைகளாய் அமைக்கப்பட்டு வருகின்றன. 1869-ல் அமுடர்யா ஆற்றங்கரை மீது அமைக்கப்பட்ட கிராஸ்னோவாட்ஸ்க் எனும் சிற்றூர் இப்போது "மத்திய ஆசியாவின் தலைவாயில்" எனும் பெயர் பெற்று மிகப் பெரிய துறைமுகமாக ஆக்கப்பட்டிருக்கிறது. துர்க்மெனியாவின்உற்பத்திகள் முழுவதும் இதன் மூலமே வெளியே செல்கின்றன. மீன் வாணிகம், எண்ணெய் முதலியவற்றிற்கு இது முக்கிய இடமாக ஆக்கப்பட்டுவிட்டது இந்நகரைச் சுற்றிலும், சைப்பிரஸ், யூக்லிப்டஸ், தாழை, ஈச்சை, திராட்சை, பீச்பழங்கள், பியர், ஆப்பிள் முதலியவை விளையும் தோட்டங்கள் உண்டாக்கப்பட்டுவிட்டன.

இங்ஙனம் சோவியத் ரஷ்யர்கள் விதியை நம்பி வாழாமல், கர்மவினை என்று கூறாமல், எல்லாம் அவன் செயல் என்று சோம்பேறி வேதாந்தம் பேசிக் காலங்கழிக்காமல் முயற்சியில், தங்கள் உழைப்பில், முழு நம்பிக்கையை வைத்து ஊக்கமும் விடாமுயற்சியும் கொண்டு, உலக மக்கள் பகற்கனவு என்று எண்ணக்கூடியவைகளையெல்லாம் நனவாக மாற்றிச் செயலில் நடத்திக் காட்டி வருகின்றனர்.

விதியிலும் கர்மவினையிலும் மூழ்கி, காயமே இது பொய்யடா என்று பாடி, மூட நம்பிக்கைகளுக்கும் பொய்த் தத்துவங்களுக்கும் வீண் வேதாந்தங்களுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழகம், கனவை நனவாக்கப் பிறந்திருப்பதாகச் செயலில் மெய்ப்பித்துக் காட்டிவரும் இந்தச் சோவியத் ரஷ்யர்களின் அரிய சாதனைகளைக் கண்டேனும் உழைப்பில் முயற்சியில் நம்பிக்கை வைத்து, நம்மையும் நம் நாட்டையும் முன்னேற்றுவிக்கும் துறைகளில் இறங்குவார்களாக.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

3—5—51

அய்யம்பேட்டை (காஞ்சீபுரம்)

என். ஜீவரத்தினம், காஞ்சி கல்யாணசுந்தரம், இராம. அரங்கண்ணல்.

4—5—51

புவனகிரி

தோழர் என். எஸ். இளங்கோ.

5—5—51

ஆரணி-சேவூர்

தோழர்கள் எம். எஸ். இராமசாமி, காஞ்சி கல்யாணசுந்தரம்.

6—5—51

செங்கற்பட்டு

தோழர் என். ஜீவரத்தினம்.

மே தின விழா கூட்டம்

1-5-51 செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் மே தின விழா பொதுக்கூட்டம் நடைபெறும்.

அறிஞர் சி. என். அண்ணாத்துரை
அவர்கள் பேசுவார்

மே நாளும் - திராவிடரும்

(தூண்டுகோல்)

இன்று பாட்டாளி மக்கள் விடுதலை பெற்ற நாள். வீணர் விலா எலும்பு முறிக்கப்பட்ட நாள் உலுத்தர் கூட்டத்தை ஒழித்துக் கட்டிய நாள் ஜனநாயகம், குடியரசு மன்னராட்சி, மக்களாட்சி என்று மக்களை ஏமாற்றி, முதலாளித்துவம் உழைப்போர் குருதி குடிக்கப்படுவது கண்டு எச்சரிக்கும் நாள்!

இந்த நாளைச் சோவியத் மக்கள் குதூகாலத்துடன், உரிமையோடு கொண்டாடுகின்றனர். மற்ற நாட்டிலும் கொண்டாடுகின்றனர்-மட்டரகம்!

இந்தியாவில்-திராவிட நாட்டில் இன்னும் கேவலம் சோவியத் மக்கள் குதூகலத்தை நம் நாட்டில் காண முடியாது. இவ்விழாவை அவர்களைப்போன்று கொண்டாட நம்மவர்உள்ளம்துடிக்குமா? இல்லை.

முதலாளித்துவத்தைப் பற்றி—உழைப்பின் உயர்வை அறியாக் கூட்டம். அறிய முடியாது அழுத்திவைத்துள்ளது ஆரியம்! ஆரியம் அழிந்து—குழிதோண்டிப் புதைக்கப்பட்டு—கல் முதலாளி—காங்கிரஸ் இவற்றை ஒழித்துக் கட்டி, அறியாமையிலிருந்து விடுதலை பெற்று—பொது உடைமையைச் சமைக்கும் நாள்தான் நமக்கு மே நாள்.

இன்று, மே நாள் விழாவில் நாம் ஆரியப் பிடிப்பு-அறியாமை-சுரண்டல் முதலியவற்றிலிருந்து விடுதலை பெற உறுதிகொள்வோமாக.

பாட்டாளி மக்களின் உரிமை நாளாகிய இன்று குடியரசு நாட்டில்—காங்கிரஸ் பச்சை முதலாளித்துவ ஆட்சி விடுமுறை அளிக்கவில்லை அளிக்காது, கயமைக் குணம்படைத்தோர் கணக்கிலடங்காதவர் இருக்கும்போது.

இல்லையெனில், மக்கள் நலனுக்கென—பாதுகாப்புக்கென — பட்டப்பகலில் படுகொலைப்புரிந்ததே பொது உடைமைத் தோழர்களை—சுட்விட்டிருப்பரா மானமிருந்தால்—உணர்ச்சியிருந்தால்.

இப்படிப்பட்ட மக்கள்-உரிமை பறிக்கப்படுவதுபற்றி-நாட்டில் பட்டினி பஞ்சம் தாண்டவமாடும் பொழுது-கண்மூடி கபோதிகளாக இருப்பார்களா? இவர்கள் எண்ணமெல்லாம், ஆண்டவன்-அவன் செய்யும் திருவிளையாடல் பற்றியே தான். உண்மையில் உணர்ச்சியிருந்தால் கிளர்ச்சி நடந்திராதா?

"மே நாள் பொது விடுமுறை நாள்" என அரசாங்கத்தை அறிவிக்கும்படி. அது தான் இல்லையே!

ஓடப்பர் உதயப்பரானல்
ஓடப்பர், உதயப்பர்எல்லாம்மாறி
ஒப்பப்பராவர்!

தி. மு. கழக நடவடிக்கை

கூடலூர்:-22—4—51ம் நாள் ஞாயிறன்று மதுரை மாவட்டம் தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம் அமைப்பாளர் வி. பரமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, இவ்வூர் தி மு. கழக நிதிக்காக பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் 23—4—51ம் நாள் மதுரைவருகையின்போது சந்தித்து ஒரு நாடகம் நடத்திக் கொடுக்குமாறு கேட்பதற்கு அமைப்பாளர் வி. பரமன் அவர்களை மதுரைக்கு அனுப்பிவைப்பதென்று, தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 22—4—51ம் நாள் மதுரை மாவட்டக் கூடலூர் தி. மு. கழகச் செயற்குழு கூட்டத் தீர்மானப்படி அமைப்பாளர் வி. பரமன் அவர்கள் மதுரை சென்று பொதுச் செயலாளர் அண்ணாவைச் சந்தித்துநிலைமையை விளக்கியவுடன், அண்ணா அவர்களும், கழக நிதிக்காக நாடகம் நடத்திக் கொடுப்பதாக வாக்களித்திருப்பதாகச் செயலாளர் அழகு எழுதுகிறார்:

"புராக்கிரஸ்"

(ஆங்கில வார இதழ்)

தி. மு கழகநோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு சனிக்கிழமை தோறும் வெளிவரும் ஆங்கில வார இதழ்.

ஆண்டு சந்தா	ரூ. 6
6 மாதம்	ரூ. 3
தனிப்பிரதி	அணா 2.

"புராக்கிரஸ்"
அலுவலகம்
மண்ணடி :: சென்னை-1

'திராவிட நாடு'

(வார இதழ்)
ஆசிரியர்:
சி. என். அண்ணாத்துரை

ஆண்டு சந்தா	ரூ. 6
ஆறு மாதம்	ரூ. 3
தனிப்பிரதி	அணா 2.

"திராவிட நாடு"
பதிப்பகம்
காஞ்சிபுரம்

மே தின விழா...

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

கட்சியின் சார்பில் கூறுகிறேன். சர்க்கார் தாராளமாகக் கவனிக்கட்டும்—புதிய சிறைச்சாலைகள் கட்டுவதற்கான திட்டங்களும் தீட்டட்டும். பாபம்! அவர்களுக்கும் ஆசை இருக்குமல்லவா! அணைக்கட்டு, பல்கலைக்கழகம், தொழிற்சாலை புதுப்பாதை, நல்லபாலம் இப்படி எதையும் கட்ட முடியாவிட்டாலும், எங்களை அடைத்து வைக்கப் புதுச் சிறைகளையாவது கட்டி ஆசையைத் தீர்த்துக்கொள்ளட்டும் திராவிடர் இயக்கம் அதற்குத் தயாராகத்தான் இருக்கிறது! `44 என்ற முள்வேலி போட்டு அதற்குள் எங்களை உலவச்செய்வதைவிட சிறைக்குள் தள்ளுவது மேல். அதைச் செய்யுமுன் அவர்கள் யோசிக்க வேண்டும், சிறைக்குள் தள்ளிக் கிளர்ச்சியை அடக்கிய எந்த வல்லரசாவது வரலாற்றிலே உண்டா என்பது பற்றி பாசீசத்தின் முதல் அடி பயங்கரானதாகத்தான் இருக்கும்—ஆனால் அதன் வீழ்ச்சி எதிர்பாராத நேரத்தில இருக்கும். சரியும் திடீரென்று. சட சடெனச் சரிந்தது பார் ஜாரின் ஆட்சி என்றார் கவி. நாம் படித்திருக்கிறோம்—நம்மை ஆட்டிப்படைக்கும் அதிகாரத்தைப்பெற்றவர்களும் அதனைப் படித்திருக்கிறார்கள்.

பிரசாரபலம், அதிகார பலம் இரண்டும் இருக்கும் காரணத்தாலே தான். வேலை நிறுத்தங்கள் ஒவ்வொன்றின்போதும், ஆளவந்தார்கள் முதலாளிகளின் முன்னோடும் பிள்ளைகளாகிப் பாட்டாளியை அடக்குகிறார்கள். தொழிலாளிக்குத் தடியடி, கண்ணீர்க்குண்டு, துப்பாக்கி! சகலமும்நடக்கின்றன கூண்டோடு பிடித்தாயிற்று கம்யூனிஸ்டுகளை. காங்கிரஸ் நாராயணசாமிக்கும் அதே கதி! தேசிய முரசு கொட்டுகிறார் முத்துசாமி வல்லத்தரசு அவருக்கும் அன்பழைப்பு 'வா ஜெயிலுக்கு' என்று. ஏன்? அவர்கள் ஏதோ உழவர்களின் உரிமைக்காகக் கொஞ்சம் உரத்த குரலில் பேசிவிட்டனர் என்பதற்காக! உரத்த குரலிருந்தால் ஊரெங்கும் சென்று கருப்பு, சிகப்பு, சட்டைகளைக் கண்டிக்கவேண்டுமே தவிர, உழவனுக்குப் பரிந்து பேசுவதா!—என்று தேசியம் அவர்களை நோக்கிக் கேட்கிறது அவர்கள் சிறையில் இருந்தபோது என்ன சிந்தித்தனர்? நாம் அறியோம்! ஆனால் ஒன்று தெளிவு ஜனநாயக உணர்ச்சியை அடக்கு முறை கொண்டு ஒழித்துவிட முடியாது. அந்த ஜனநாயக உணர்ச்சி ஏற்பட வேண்டுமானால், பலப்பட வேண்டுமானால், நெஞ்சில் உரமும், நேர்மைத் திறமும் வேண்டும். பழமையின் பிடிப்பிலிருந்து விலகும் நோக்கம் இருக்க வேண்டும். இதற்குத் தான் நாம் அறிவுத்துறையிலே புரட்சி ஏற்பட்டாக வேண்டுமென்று கூறுகிறோம். மே தினச் செய்தி, பாட்டாளிகளின் விடுதலைச் செய்தி, அந்த விடுதலை, பொருளாதாரத் துறையினது மட்டுமல்ல—அறிவுத் துறையிலே விடுதலைவேண்டும். ஒன்றுக்காக மற்றொன்றை விட்டுவிடுவதோ, மட்டமாக மதிப்பிடுவதோ, ஆகாது என்று கூறுவதோ, அவசியமல்ல. இரண்டும் தேவை—இரு நோக்கமும் கொண்டதே திராவிடர் கழகம். பாட்டாளிகளின் விடுதலை தினமாகப் பாரெங்கும் கொண்டாடப்படும் இந்த மேதினத்தன்று, நாம் திராவிட நாடு திராவிடருக்கே என்று கூறுகிறோம்—இது உலகம் உழைப்பாளிகளுக்கே என்ற முழக்கம் போன்றதே, குறிச்சொல் மட்டுமே வேறு—குறிக்கோள் ஒன்றுதான். உலகம்உழைப்பாளிகளுக்கே உலுத்தர்களுக்கு அல்ல,பிறன் உழைப்பை உண்டு கொழுப்போருக்கு அல்ல, சுரண்டி வாழுவோருக்கு அல்ல, முதலாளித்துவத்துக்கு அல்ல; ஆம்! அதே பொருளின்தான் திராவிட நாடு திராவிடருக்கு, ஆரியருக்கு அல்ல, அண்டிப் பிழைக்க வந்து நம்மை மண்டியிடச் செய்த மதத் தரகர் ஆட்டத்துக்கு அல்ல, வடநாட்டு முதலாளித்துவத்துக்கு அல்ல, உழைக்கும் உத்தமர்களாகிய திராவிடர்களுக்கே என்று கூறுகிறோம். மேதினத்தன்று பாட்டாளிகளுக்கு நாம் கூறும் செய்தி இதுதான்.

பாட்டாளியின் உயர்வுக்கு உழைத்த ஸ்டாலின்

[*M. R.* இளங்கோவன்]

1879 ஜியார்ஜியாவில் உள்ள கோரி கிராமத்தில் பிறந்தார்.

1888 பள்ளியில் சேர்ந்தார்.

1894 மார்க்ஸ் கொள்கைகளை வாதிக்கும் கூட்டத்தில் சேர்ந்தார்.

1896 மார்க்சீசக் கொள்கைகளைக் கையாள முற்பட்டார்.

1898 தொழிலாளர்கட்சியின்உறுப்பினராகி மார்க்சீசக் கொள்கைகளைப் பரப்பினார்.

1900 ருஷ்யாவின் சமுதாய ஜனநாயகக் கட்சியின் உட்கழக உறுப்பினரானார்.

1901 டிப்லிஸில் மேதின விழா நடத்தினார்.

1902 அரசாங்கத்தாரால் கைது செய்யப்பட்டார்.

1903 நாடு கடத்தப்பட்டார்.

1904 சிறையினின்றும் தப்பி மீண்டும் கைதானார்.

1905 ஜனநாயகக் கட்சித் தலைவராக ஏற்றுக்கொள்ளப் பட்டார்.

1907 லண்டனில் நடந்த ஐந்தாவது காங்கிரஸ் மாநாட்டில் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார்.



ஸ்டாலின்

1908 கைது செய்யப்பட்டார்.

1909 சிறையிலிருந்து தப்பி, பாகு நாட்டிற்கு வந்து, தாம் விட்டுச்சென்ற பணியைத் துவக்கினார்

1912 போல்ஷ்விக் இயக்கம்துவக்கமாகியது.

1913 மலினவ்ஸ்கி என்பவரால் போலீசுக்குக் காட்டிக் கொடுக்கப்பட்டார்.

1916 இராணுவத்தில் சேர்ந்தார்.

1917 அக்டோபர் புரட்சி.

1919 புரட்சி இயக்க ஆக்க வேலைகள் செய்தார். "ஆர்டர் ஆப்ரெட் பானர்" என்னும் பட்டம் பெற்றார்.

1920 தென் மேற்குப் போர்முனைக்குச் சென்றார்.

1921 பத்தாவது.போல்ஷ்விக் காங்கிரஸ் கூடியது:

1922 பொதுவுடைமைக் கட்சிக்குப் பொது அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். நாட்டு நிர்வாகத் தலைவரானார்.

1927 ஜர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரியா, செக்கோஸ்லோவாக்கியா, சைனா, பெல்ஜியம் முதலிய நாட்டுத் தொழிலாளர்களைச் சந்தித்துக் கலந்து பேசினார்.

1933 முதலாவது ஐந்தாண்டுத்திட்டம் நிறைவேறியது.

1937 இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறியது.

1937 அறுபதாண்டு நிறைவு விழா நடந்தது.

1945 சோவியத் யூனியன் தலைமைத் தளபதி என்ற பட்டம் பெற்றார்.

1946 ஸ்டாலின் அரசியல் திட்டப்படி புதிய தேர்தல்கள் நடந்தன.

1951 ஸ்டாலினுக்கு இன்றுடன் 72 வயதாகிறது.

* * *

லெனின் வழியினைப் பின்பற்றி நின்று ஜோசப் ஸ்டாலின் சோவியத் ரஷியக் குடியரசைச் சேர்ந்த 16 குடியரசு நாடுகளையும் இன்று உலகுகண்டு வியக்கும்வண்ணம் ஆட்சி செய்துவருகிறார். சோவியத் ரஷ்யர் நடத்தும் ஆட்சியில் மக்களுக்கு வேலை தேடிக் கொடுப்பதும் வேலைக்குத்தக்க ஊதியம் பெறச் செய்வதும் அரசாங்கத்தின் பொறுப்பு. வேலையில்லை என்று எவரும் சொல்வதோ, வேலையில்லாத் திண்டாட்டமோ அங்குக் கிடையாது.

* * *

எட்டு மணி நேர வேலைக்குப் பின் ஓய்வை வேடிக்கையாக, மன உல்லாசமடையுமாறு கழிக்க வசதிகள் செய்வது சோவியத் அரசாங்கத்தின் கடமை.

* * *

வேலையின் கஷ்டத்திற்குத் தகுந்தாற்போல, 4, 5, 6, 7, 8 மணி நேர வேலை என்று பிரித்து வைத்து வேலை செய்பவர்கள் களைப்படையாதபடி செய்வது சோவியத் அரசாங்கத்தின் கடமை.

* * *

ஏழாவது வகுப்புவரை எல்லா மக்களுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியளிப்பதும், கல்வியில் தேர்ச்சியும் ஆர்வமும் உடையவர்களுக்கு, அவரவர் திறனுக்கேற்ற உயர் கல்வியையும் தொழிற் கல்வியையும் தன் செலவில் அளிப்பதும் சோவியத் அரசாங்கத்தின் கடமை.

* * *

மூப்புப் பருவத்திலும், தீராப் பிணியிலும், சக்தியற்றுப் போகும் சமயங்களிலும் மக்களை உட்காரவைத்துக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு சோவியத் அரசாங்கத்துடையது.

* * *

இவ்வாறு ஸ்டாலின் தலைமையில் சோவியத் அரசாங்கம் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

புரட்சி வளர்ந்த கதை......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் கொடுங்கோலர் கூட்டத்தின் உயிர்த் தோழனான கடவுளீயம் "சிதையே சிதையே" என்று பாடிற்று.

புரட்சி அடங்கிற்று; மழை ஓய்ந்தது; தூற்றல் நிற்கவில்லை. சுமார் எட்டு மாதங்கள் ரஷ்யாவில் சில்லறைக் குழப்பங்கள். தொழிலாளர் சக்தி முழுவதையும் போல்ஷ்வெக் கட்சியின் பக்கம் திரட்டத் திட்டம் போட்டான் லெனின். 1917 நவம்பர் ஏழாம நாள் அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் பீட்ரோகிராடில் நடை பெற்றது.

கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தபோதே போல்ஷ்வெக் படையினர், அரசாங்கத்தைக் கைப்பற்றிக் கொண்டனர். தற்காலிக அரசாங்கத்தின் பிரதம மந்திரி கெரென்ஸ்கி பெண் வேடத்தில் தப்பியோடினார். சோவியத் அரசாங்கம் நிறுவப்பட்டது. இல்லை. புது வாழ்வுக்குக் கால் கோல் விழா செய்யப்பட்டது. அந்த வெற்றிச் சிரிப்புத்தான் இன்றைய மேதினத்திலே எதிரொலிக்கிறது. அந்த எதிரொலி திராவிடத்தில் இன ஒலியை—சுய மரியாதை ஒலியை எழுப்புமா?

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

1951-ஆம் மே-மீ 5, 6 தேதி சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
சேலம் அம்மாபேட்டை மெயின் ரோடு உயர்திரு B. P. சின்னசாமி செட்டியார்
நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கும்

தியாகராயர் பந்தலில் நடைபெறும்

தலைவர்: நாகர்கோவில் தோழர் V. M. ஜான்

துவக்குபவர்: சென்னை தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார்

**மாநாட்டில் பொதுச் செயலாளர் அறிஞர் C. N. அண்ணாத்துரை M. A. அவர்களும்
மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் பலரும் கலந்துகொள்ளுகின்றனர்**

அறிஞர் C. N. அண்ணாத்துரை M. A., நடிப்புப்புலவர் K. R. ராமசாமி E. V. K சம்பத்
K. R. R. குழுவினருடன் நடிக்கும்

"சந்திரமோகன்" "நீதிதேவன் மயக்கம்"

ஆகிய இரு நாடகங்களும் நடைபெறும்

வெளியூர்ப் பிரதிநிதிகள் தங்குவதற்கும், உணவுக்கும் நல்ல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. உணவிற்கு விருதுநகர் சமையற்காரர்களை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

கட்டண விவரம் (நாடகங்கள் உட்பட)

வரவேற்புக் குழு அங்கத்தினர்	ரூ. 5-0-0	பார்வையாளர்	ரூ.	2-0-0
பிரதிநிதிகள்	,, 3-0-0	பெண் பார்வையாளர்	,,	1-0-0
		உணவுக் கட்டணம் இரண்டு நாட்களுக்கு	,,	2-8-0

குறிப்பு:—பார்வையாளர்கள் ஒவ்வொரு நாளைக்குத் தனித்தனியாகவும் டிக்கட் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு நாளைக்கும் ஆண் பார்வையாளர் ரூ. 1—0—0, பெண் பார்வையாளர் ரூ. 0—8—0.

G. P. சோமசுந்தரம்
வரவேற்புக் குழுத் தலைவர்

தி.மு.க. மத்தியசெயற்குழு கூட்டம்

7-5-51 திங்கட்கிழமை கூடும்

திராவிட முன்னேற்றக் கழக மத்திய செயற்குழு கூட்டம் 7-5-51 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு சேலம் மாநாட்டுப் பந்தலில் நடைபெறும். அச்சமயம் சென்னையில் நடைபெறப் போகும் மாநில மாநாட்டிற்கு செயற்குழு அமைப்பைப்பற்றி யோசித்து முடிவு செய்யப்படும். செயற்குழு உறுப்பினர் தவறாது, கூட்டத்தில் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

சி. என். அண்ணாத்துரை
பொதுச் செயலாளர்

கொரில்லா....

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கொண்டே உலகை எட்டிப் பார்த்தான்.

டான்யா தூக்குமேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

இந்தத் 'தூக்கு விழாவைக்' காண்பதற்காக அவ்வூர் மக்கள் தவறாமல் வர வேண்டுமென்று ஜெர்மானியர் கட்டளைப் பிறப்பித்தனர்.

டான்யா தூக்குமேடையின் மேல் ஏறி நின்றாள். மேடையைச் சுற்றிலும் சுமார் நூறு ஜெர்மன் போர் வீரர்கள் தயாராய் நின்றிருந்தனர்.

ரஷிய மக்கள், கண்களில் நீர் வழிந்த வண்ணம் நின்றிருந்தனர்.

தூக்கு மேடையின் மேல் நின்றிருந்த டான்யா பேச ஆரம்பித்தாள்.

'தோழர்களே! நீங்களேன் கண்ணீர் வடிக்கிறீர்கள்? ஒன்றுக்கும் அஞ்சாதீர். கவலையை மறந்து கடமையைச் செய்யுங்கள்! கோழைகளல்ல, நாம் வீரர்கள் என்ற உண்மையை உலகு அறியச் செய்யுங்கள்: தளாராது தாக்குங்கள் நாஜிகளை! போக்குங்கள் அவர்களின் உயிரை! ஸ்டாலின் நம்பக்கமிருக்கும் வரைக்கும் வெற்றியும் நம் பக்கம்தானிருக்கும்!

'நாஜிப் பேயர்களே! டான்யா ஒருத்தி அல்ல ரஷ்யாவில், பலர் இருக்கிறார்கள்! இருபது கோடிப் பேர் நாங்கள் இருக்கிறோம்! எங்களை உங்களால் அழிக்கவோ, அடக்கவோ முடியாது! என்னை ஒருத்தியைக் கொன்றுவிட்டால், ரஷ்யாவைப் பிடித்துவிட்டதாக எண்ணி மகிழாதீர்கள்! ரஷ்ய நாட்டு இளஞ் சிங்கங்கள் பழிக்குப்பழி வாங்குவார்கள்! எமக்கே வெற்றிக்கிட்டுவது நிச்சயம்!

'தோழர்களே! சென்று வருகிறேன்! கடைசிவரைக்கும் நடுங்கா உள்ளத்தோடு போரிட்டு நாஜிகளை ஓட்டுங்கள்! நாட்டுங்கள் வெற்றிக் கொடியை! வணக்கம்! வாழ்க ரஷ்யா!"

டான்யாவின் கழுத்தில் கயிறு மாட்டப்பட்டது. கொலையாளி சுருக்கை வேகமாக இழுத்தான்! அய்யோ! டான்யாவின் உயிர் பிரிந்தது! மாண்டாள் கொரில்லாப் பெண்!

ஒரு மாதம் வரைக்கும் வீரப்பெண் டான்யாவின் பிணம் தூக்குமரத்திலேயே ஊசலாடிக்கொண்டிருந்தது. அவ்வழியாகச் செல்லும் நாஜிச் சிப்பாய்கள் அப்பிணத்தை ஆட்டிவிட்டு கலகலவென்று வீரச் சிரிப்புச் சிரித்துவிட்டுச் செல்வார்கள். அப்பிணத்தைக் கண்டதும் ரஷ்யர்களின் கண்கள் குளமாகும்! துக்கம் அவர்கள் உள்ளத்தில் ஊடுருவிப் பாயும்! உதடுகள் துடிதுடிக்கும்! உள்ளம் எரிமலையாகும்!

நாட்கள் உருண்டன! மாஸ்கோவிலிருந்து நாஜிகள் ஓடி உயிர் தப்ப வேண்டிய அளவிற்கு நிலைமை தலைகீழாக மாறிற்று. சிங்கத்தைப்போல சீறிப் போரிட்டார்கள் செஞ்சேனை வீரர்கள்.

டான்யா கொலையுண்ட ஊர் திரும்பவும் ரஷியர் வசமாயிற்று. அங்கேயிருந்த பாடசாலையில் ரஷியாவின் வீர மகள், தியாகத்தின் சிகரம், டான்யாவிற்கு கல்லறை கட்டினார்கள்.

டான்யா புகழ் உலமுழுவதும் பரவியது! டான்யாவின் உருவமும், கொலையுண்ட கோரக் காட்சியும் ஒவ்வொரு செஞ்சேனை வீரனின் உள்ளத்திலும் நிலைத்து நின்றது! அன்று அவள் ஆற்றிய வீர உரை ரஷியர்களின் இதயத்தில் சுற்றி சுற்றி வட்டமிட்டவண்ணமிருந்தது. டான்யாவை எண்ணி வீரத்தோடு வெஞ்சமர் புரிந்தனர்! தளர்ச்சியடையாமல் உணர்ச்சியோடு போரிட்டனர். ஜெர்மானியர்கள் ஓட ஓட விரட்டினர். பழிக்குப்பழி வாங்கினர்! பறித்தனர் உயிருக்குஉயிர்!

சோவியத் மக்கள், வீர வெள்ளத்தில் நீந்தி, வெற்றிக்கரையை வந்தடைந்தனர்! டான்யாக்களின் தியாகத்தின் அறுவடையாக வெற்றி மலர் பூத்தது!

சுவஸ்திக் கொடி, தரையில் விழுந்தது! சம்மட்டி அரிவாள் கொடி விண்ணில் பெருமிதத்தோடு! பறந்தது!

வெற்றி விழாக் கொண்டாடிய பொழுது மக்கள், 'வாழ்க டான்யா! வாழ்க கொரில்லாப் பெண், வாழ்க ரஷ்யா!' என்று வானம் முட்ட வாழ்த்தொலியை எழுப்பினார்கள்!

கொரில்லாப் பெண்

[இராதாமணாளன்]

இளம் பெண் இப்படியும் அப்படியுமாக அறையில் உலாவிக்கொண்டிருந்தாள். அவளைப் பெற்று வளர்த்த அன்னையின் முகத்தில் ஏக்கம் கப்பிக்கொண்டிருந்தது. அவள் கன்னங்களில் தாரை தாரையாக வழிந்து கொண்டிருந்தது கண்ணீர்.

'அம்மா, என் அழுகிறீர்கள்! இந்த நேரத்தில் ஒரு ரஷியப் பெண்ணாகிய நான் செய்ய வேண்டியது இதுதான்!'

'கண்ணே! உன் அம்மான்கூட இப்பொழுது இல்லையே! நீயோ இளம் பெண்!...'

'வயதான பெண்களால் முடியாத காரியங்கள் எவ்வளவோ இளம்பெண்களால் முடியும்! கவலையை விடுங்களம்மா!'

'நாஜிகள் மனிதர்களல்லவே, மிருகங்களாயிற்றே!'

'மிருகங்களை வெல்வது சுலபம்! வெறிபிடித்த நாஜித் துருப்புகள் மாஸ்கோ நகரத்தைத் தாக்கித் தகர்க்கும் இந்நேரத்தில் என் குருதியில் கொதிப்பேறாமல் இருக்க முடியுமா? சோவியத் நாட்டிலே பிறந்து, சோவியத் மண்ணிலே விளையாடிய நான், சோவியத்திற்கு ஆபத்து என்றால் சும்மாவா இருக்க முடியும?'

'ஸோயா! என் கண்ணே! ஹிட்லர் ஈவு இரக்கமற்றவன். கொடுமை அவனது பொழுதுபோக்கு. அவன் படையினரும் மூர்க்கர்கள! அவர்களிடம் நீ சிக்கிக்கொண்டால்...'

'அதைக் குறித்துத் தங்களுக்குக் கவலைவேண்டாம். நான் வீரர் மரபில் உதித்தவள். அவசியம் கொரில்லாப் படையில் நான் சேரத்தான் போகிறேன்!'

'ஸோயா!...'

'தடை செய்யாதீர்களம்மா! தைரியமாக இருக்கவேண்டுமென்று தாங்கள் தானே சொல்லிக்கொடுத்தீர்கள்.'

'என் கண்ணே...'

'அம்மா! அம்மா! தாங்களா இப்படிக் கோழையாகிவிட்டீர்கள்! நம் நகரங்கள், நாஜிகள் குண்டு பொழிவதால் நாசமாக்கப்படும் இந்த நேரத்தில் ஒரு ரஷியப்பெண் தன் கடமையைச் செய்ய வேண்டாமா?'

டான்யாவிற்கும் அவள் அன்னைக்கும் நடந்த பேச்சு இது.

டான்யா படுத்துக்கொண்டாள். மகளின் முகத்தை உற்றுப் பார்த்துவிட்டு அன்னை தன் அறைக்குச் சென்று கட்டிலில் படுத்துக்கொண்டாள். அவள் உள்ளம் குழப்பியது. கண்களில் நீரின் ஊற்று காயவில்லை! அவள் உள்ளத்தில் டான்யா பிறந்ததிலிருந்து, வளர்ந்து பெரியவளாகி கொரில்லாப்படையில் சேரத் தீர்மானித்த வரைக்கும் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் ஒன்றின்பின் ஒன்றாகத் தோன்ற ஆரம்பித்தன!

டான்யா ரஷியாவில் ஒரு சிறிய கிராமத்தில் 1923-ம் ஆண்டு பிறந்தாள். அவளுக்குப் பத்து வயதாகும் பொழுது, அவள் தகப்பனார் இறந்துவிட்டார்.

டான்யாவை அவள் தாய் அன்போடும் ஆசையோடும் வளர்த்து வந்தாள்.

ஸோயா என்பதுதான் அவள் சொந்தப் பெயர். அவள் அன்னையும் அப்படித்தான் அழைப்பாள். ஆனால் அவள் தன் பெயரை டான்யா என்று மாற்றிக்கொண்டாள்.

அன்னை வேலைக்குச் சென்றுவிட்ட பிறகு, வீட்டு வேலைகளைச் செய்துவிட்டுப் பள்ளிக்குச் செல்வாள் டான்யா.

ஒரு நாள் அன்னை கடைக்குச் சென்றுவிட்டு வீட்டிற்குத் திரும்பினாள்.

"அம்மா கேட்டீர்களா செய்தியை?"

"என்ன ஸோயா?"

"நம் நாட்டின் மீது ஹிட்லர் பாயத் துணிவு கொண்டு விட்டானாம்!"

"உண்மைதான் ஸோயா!"

நாட்கள் சில சென்றன. விண்ணிலிருந்து ஜெர்மனியர் மாஸ்கோவின் மீது சரமாரியாகக் குண்டுகள் போட்டனர்! நகரத்தின் அழகு, நாஜிகளின் குண்டு வீழ்ச்சியினால் பாழாயிற்று. மாடமாளிகைகள் மண்ணோடு மண்ணாயின! பிணங்கள் குவிந்தன! செந்நீர் ஆறாக ஓடியது! கோரம் தலை விரித்தாடியது!

1941-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஒரு நாள், டான்யா தன் தாயின் அருகில் வந்தாள்.

அம்மா! ரகசியமாக யுத்தகளத்தில் எதிரிகளின் வட்டாரத்தில் புகுந்து வேலைசெய்யும் கொரில்லாப் படையில் சேரப்போகிறேன்!

'என்ன?'

'உண்மையாகத்தான் அம்மா! இது மிகவும் ரகசியமான வேலை, யாரிடமும் கூறாதீர். தப்பிக்கேட்டால் தாத்தா வீட்டிற்குச் சென்றிருப்பதாகச் சொல்லுங்கள்!

'ஸோயா! இது ஆண்பிள்ளைகளின் வேலையாயிற்றே?'

'ஆண் யார்? பெண் யார்? சோவியத் நாட்டில் எல்லோரும் வீர மக்கள்! வீரம் ஆண்களுக்கு மட்டும் சொந்தமா அம்மா?'

'ரஷியப் பெண்கள வீராங்கனைகள் தான் ஸோயா!...நீ போய்ப் படுத்துக் கொள்! பிறகு யோசிக்கலாம்!'

இப்படியே பல நாட்கள். டான்யா கொரில்லாப்படையில் தான் சேர ஆசைப்படுவதாகத் தன் தாயிடம் கூறிக்கொண்டேயிருந்தாள்.

கட்டிலில் படுத்துப் புரண்டுகொண்டிருந்தாள் அன்னை. அவளுக்குத் தூக்கமே வரவில்லை. பழைய நினைவுகள் தோன்றி மறைந்ததும், தன் மகளின் எதிர்காலத்தைப் பற்றிக் கற்பனை செய்ய ஆரம்பித்தாள். நீண்டு கொண்டே சென்ற கற்பனையை இடையே பொழுது புலர்ந்துவிட்டதால் நிறுத்த வேண்டியதாயிற்று.

காலை உணவு முடித்துக்கொண்டு, டான்யா நகைத்த முகத்துடன் அன்னையின் முன் வந்து நின்றாள். அன்னையின் முகத்தில் வருத்தம் தோய்ந்திருந்தது.

'அம்மா!'

'ஸோயா!'

'நான் சென்று வரட்டுமா?'

அன்னை தேம்பித் தேம்பி அழுதாள்! அவளைச் சேர்த்து அணைத்துக்கொண்டு புன்முறுவல் பூத்த முகத்தோடு தைரியம் கூறினாள். டான்யா.

'ஸோயா! அனாதையாக என்னை விட்டுச் செல்வது சரியா?'

'சோவியத் நாட்டில் அனாதை யார்? பணக்காரன் யார்? வீரத்திற்கோர் எடுத்துக்காட்டாக இருக்கவேண்டிய ஒரு ரஷியத் தாயா இப்படி அழுது கொண்டே பேசுவது? அம்மா! போரில் வெற்றிபெற்றுத் திரும்புவேன் அல்லது களத்திலேயே மாள்வேன்!'

'கண்ணே! என் இதயம் வெடித்து விடும்படி பேசுகிறாயே!'

'அழுதுகொண்டே என்னை அனுப்பாதீர்களம்மா!' என்று அன்னையின் கன்னத்தைத் தடவிக்கொடுத்துக் கொண்டே கெஞ்சினாள்.

'சரி' என்பதற்கு அறிகுறியாக தாய் தலை அசைத்தாள்.

களிப்புடனே வெளியே வந்து, காரிலேறிப் பறந்தாள் டான்யா!

1941-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16-தேதி ஜெர்மானியர்கள் மாஸ்கோவைப் பலமாகத் தாக்கினார்கள். வோல்கா நதிவரைக்கும் நாஜிகள் வந்துவிட்டார்கள். யாக்ரோமா ஜெர்மானியர் வசம் சிக்கியது. ரஷியர்கள் தோல்வியுற்று ஓடிய வண்ணமிருந்தனர். மக்கள் ஆயிரக் கணக்கில் தினந் தினம் மடிந்தார்கள்.

சோவியத் படை, ஜெனரல் ஜுகாவின் தலைமையில் கடும்போர் புரிந்தது. ஜெர்மானியர் பிடித்த ரஷ்யப் பிரதேசங்களில், மறைந்து மறைந்து கொரில்லாப் படையினர் நாஜிகளுக்குப் பல துறைகளிலும் தொல்லைகள் கொடுத்துக்கொண்டிருந்தனர்.

கொரில்லாப் படையால், சுவஸ்திகக் கொடியினர் சொல்லொணா அவதிகளை அனுபவித்தார்கள். ஒரு நகரைப் பிடித்துவிட்டோம் என்ற மன மகிழ்ச்சியோடு நாஜித்துருப்புகள் கூடாரங்களில் தூங்க முடியாது! கொரில்லா வீரர்கள் மறைந்திருந்து, தக்க சமயத்தில் எதிரிகளைத் தாக்கி இன்னலைச் செய்துகொண்டேயிருந்

16-ம் பக்கம் பார்க்க



இரண்டாவது அகில ரஷ்ய சோவியத் காங்கிரசில் லெனின் பேசுகிறார்

மே தின......

(4-ம் பக்கத் தொடர்)

கொண்டாடினுல், பொருளாதார காரணங்களை மட்டுமே பெரிதும் வலியுறுத்திக் காட்டுவர். அவர்கள் மக்களின் வறுமைக்கும் வாட்டத்துக்கும் காரணம், பொருளாதார யந்திரக் கோளாறு என்று கருதுகிருர்கள். யந்திரக் கோளாறு நிச்சயமாகவே மக்களின் வாட்டத்துக்குக் காரணம்தான். அந்த யந்திரம் தகர்த்தெறியப்பட்டு மக்களின் வாழ்வை மிருக நிலைக்குக்கொண்டு போகாத புதிய யந்திரம் செய்யப்பட வேண்டியதும் மிக அவசியந்தான். இதைத் திராவிடர் கழகம் என்றுமே மறுத்ததில்லை. ஆனல் ஏன் இத்தகைய சுரண்டல் யந்திரம் உருவாக்கப்பட்டது? எப்படி? வாரால்? மக்கள் ஏன் இதனை அனுமதித்தனர்? ஏன் இன்னும் சகித்துக் கொள்கின்றனர்? என்னகூறி கஷ்டப்படும் மக்களை சுரண்டுபவர்கள் மயக்கியும் அடக்கியும்வைக்க முடிகிறது? என்பன போன்றவைகளைத் திராவிடர் இயக்கம் மக்கள் மன்றத்துக்குக் கொண்டுவந்து நிறுத்துகிறது மற்றக்கட்சிகள், இவைகளை எடுத்துக்காட்டுவதில்லை- அச்சம் காரணமாகவோ, அலட்சியத்தின் காரணத்தாலோ, அல்லது அவகாசம் இல்லாததாலோ, எக்காரணம் பற்றி மற்றவர்கள், இந்த விஷயங்களைப் பற்றிக் கூருமலிருப்பினும், நாம், இவை மக்களால் சிந்திக்கப்பட்டு, அந்தச் சிந்தனையின் பலனுக, அறிவுத்துறையிலே ஒரு புரட்சி ஏற்பட்டாலொழிய பொருளாதாரப் புரட்சியினுல் மட்டும் புது வாழ்வு கிடைத்துவிடாது என்று நம்புகிறேம்: ஆழ்ந்த நம்பிக்கை இது. எனவேதான் நாம், மனிதன் அடிமைப்பட்ட காரணத்தையும், அந்த அடிமைத்தனம் எப்படி நீக்கப்படவேண்டும் என்பதையும், நாம் நமது பிரசாரத்திலே முக்கிய பகுதியாகவைத்துக்கொண்டிருக்கிறேம். மனதிலே உள்ள தளைகளை நீக்குவது, அவசியமான காரியமென்பதை உணர்ந்து, ஐரோப்பாக்கண்டத்திலே, பேரறிவாளர்களான, வால்டேர், ரூசோ போன்றேர், அறிவுத்துறைப் புரட்சிக்காகஎப்பணியாற்றினரோ, அதே விதமான பணியினையே நாம் புரிகிறேம்.

விவரங்களுக்கு எனெஸ்'கேபிலிம்ஸ் 6 வேங்கட்ராமய்யர்தெரு தி. நகர். சென்னை-17.

பொதுவாகவே நாம் சிந்தித்தால், இந்தப் பணியின் அவசியம் நன்கு விளங்கும். உலகிலே உள்ள கஷ்டங்கள், வறுமை, பிணி, வேலையில்லாக் கொடுமை, பாட்டாளி படும் துயரம், இவைகள் எல்லோரும் இன்புற்று வாழுவதற்கு ஏற்ற வசதி இல்லாததால் உண்டானவையா என்று யோசித்தால், இல்லை என்று தெரியும். ஆராய்ச்சியாளர்கள் புள்ளி விவரங்களைக் காட்டியே கூறியிருக்கிருர்கள். இயற்கை தரும் செல்வத்தை, வசதியைக் கொண்டு, நாளொன்றுக்கு சராசரி 2 மணி நேரம் எல்லோரும் வேலை செய்தால், எல்லோரும் வயிரு உண்டு வாழலாம் என்று கூறியிருக்கிருர்கள். அவ்வளவு இயற்கைச் செல்வமும் அதனை மக்களுக்கான உபயோகப் பொருள்களாக்கும் பாட்டாளியின் சக்தியும் உள்ளன. இருந்தும் இவ்வளவு இன்னலை, இங்கு மட்டுமல்ல, எங்கும்- இன்று மட்டுமல்ல, பன்னெடுங்காலமாக, அனுபவித்து வரவேண்டியிருக்கிறது—சகித்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. சாமான்யர்களாகிய நம் காலத்திலே மட்டுமா! வீராதி வீரர்கள், சாம்ராஜ்யாதிபதிகள் காலத்திலேயும்சரி, யோகயாக விற்பன்னர்கள், வேதவேதாந்த சிரோமணிகள், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அஷ்ட சித்தியை அறிந்தவர்கள், அரிஅரனை அழைப்பவர்கள், ஆத்மஞானிகள் என்போர்களின் நாட்களிலேயும், இந்தப் பிரச்னை இங்கிருந்து வந்ததுடன், இல்லாமை போதாமை எனும் நோயின் பிடிப்பிலே சிக்கி ஒரு பெருங்கூட்டம் அவதிப்படவும், செல்வத்திலும் சுகத்திலும் சிறு கூட்டம் அமிழ்ந்து கிடக்கவுமான நிலைமை இருந்துவந்தது. இதனை மக்கள் பலகாலமாகச் சகித்துக்கொண்டனர்— நம்மால் முடியாது என்றெண்ணி மருண்டனர்- யாராவது இதை மாற்றும் முறையைக் கூற முன் வர மாட்டார்களா என்று ஏங்கி நின்றனர். எந்தக் குறுக்கு வழி புகுந்தேனும் இந்தக் கஷ்டத்திலிருந்து நீங்க முடியுமா என்று பதைத்தனர், ஒருவரை ஒருவர் வெட்டி வீழ்த்திக்கொண்டனர் என்னென்னவோ செய்தனர்-இந்தப் பிரச்னையைத் தீர்க்க. இன்னும் ஓர் முடிவு காணவில்லை மனிதனுல் இந்த பிரச்னைக்கு முடிவு காண முடியாத காரணம் என்ன? அறிவு இல்லை என்று கூறிவிட முடியுமா? பறக்கக்கூடக் கற்றுக்கொண்டான். பார் முழுவதையும் பாக்கட்சைஸ் ரேடியோவுக்குள் அடக்கிவிட்டான். இன்னமும், பசி, பட்டினி, பஞ்சம் இன்றி எல்லோரும் வாழ வழி கண்டுபிடிக்கமட்டும் மனிதனுடைய அறிவு அவனுக்குப் பயன்படவில்லை, அறிவுப் பஞ்சம் அல்ல இதற்குக் காரணம். அவனுக்குள் புகுத்தப்பட்ட அச்சம், அவனுடைய அறிவூற்றைப்பாழ்படுத்துகிறது. அதனுலேயே மனிதன் மனம் அலைமோதி நிற்கிறது.

மனிதன் கஷ்டம் அனுபவித்த போது மதவாதிகள் அவனுடைய கண்ணையும் கருத்தையும், எந்த உண்மைக் காரணத்தால் மனிதன் கஷ்டப்படுகிருனே அந்தக் கார

...ணங்களைக் காண ஒட்டாமல் தடுத்துக் கைலாயம், வைகுந்தம், காகுந்தன், காளியாயி, ஜெபமாலை, உடுக்கை இப்படி வேறு பல பொருள்கள் முறைகள் மீது திருப்பிவிட்டனர். மனிதன் திக்குத் தெரியாத கலத்தைப் போலானான் எனவேதான், அவன் தன் நிலையை மாற்றிக்கொள்ளும் முயற்சியில் தோற்கவேண்டி நேரிட்டது. எடுத்துக் காட்டாக ஒன்று கூறுகிறேன். கூலி உயர்வுக்காகவோ, போனசுக்காகவோ ஒரு தொழிலாளர் சங்கம் போராடுகிறது என்று வைத்துக்கொள்வோம். அதிலே கிளர்ச்சி வலுக்கிறது. நண்பர் ஜீவானந்தத்தின் வீர முழக்கம் கேட்டு விறுவிறுப்படைகிறான் பாட்டாளி. கூட்டம் முடிந்து வீடு போகிறான். அங்கு என்ன நிலை?

மனைவி:-வேலை கூடத்தான் இல்லையே, எங்கே போய்ச் சுற்றிவிட்டு வருகிறீர்கள் மணி பத்து ஆகிறதே!

தொ:-பைத்யமே! இன்று மீட்டிங்கு.

மனை:-அதுதான் இருக்குதே ஒவ்வொரு தினமும், என்ன சொன்னாங்க?

தொ:-முதலாளி இறங்கி வந்தே தீரவேணும். வர்க்கப் போராட்டம் நடக்கிறது வள்ளி! இதிலே பாட்டாளி வர்க்கந்தானே ஜெயிக்கோணும்.

மனை:-என்னமோ பொன்னியம்மா புண்யத்தாலே அந்த முதலாளி மனசு மாறி ஏழைக மேலே இரக்கம் காட்டவேணும்.

இதுதான் பேச்சாக இருக்கும்.

மார்க்சின் தத்துவம், லெனின் முழக்கம், அக்டோபர் புரட்சி, இவை எல்லாம் மேடையில்! வீட்டில், பொன்னியம்மாள் புண்யம், முதலாளி மனசு இளகவேணும், இவை பேசப்படும். தொழிலாளியின் மனைவியின் மனம் மட்டுமல்ல, தொழிலாளியின் மனமேகூட, ஜீவாவின் குரலிலே, ஜோஷியின் அறிக்கையிலே, கம்யூனிஸ்டுக் கிளர்ச்சியிலே ஈடுபடுவதைவிட விநாயகரகவலிலே விளக்குவைத்துப் பார்ப்பதிலே சனி கோயில் பூஜையிலே சோதிடர் சொன்னதிலே தான் அதிகமாக ஈடுபடும். இந்த மனப் போக்குத்தான் சகித்துக் கொள்ளும் தன்மையை, நம்மால் என்ன ஆகும் என்ற சலிப்பை வளரச் செய்துவிட்டது. திராவிட இயக்கத்தாராகிய நாம் மே தினத்தன்று, இந்த மனப்போக்கை மாற்றும் பணி புரிவதன் மூலம் பாட்டாளிகளின் பிரச்னையிலே மற்றவர்கள் கவனிக்கத் தவறிய ஆனால் முக்கியமான பகுதியை வலியுறுத்துகிறோம்.

பூர்ஷுவா (முதலாளித்துவம்) என்ற தத்துவத்தை விளக்கும் யாரும், அது சுரண்டும் முறை-பிறனுடைய உழைப்பால் வாழும் முறை என்று கூறுவர். நாம் ஆரியம் என்று கூறுவது, இதே நிலையைத்தான். 'சுரண்டும் முறை—தொழிலின் பேரால் அல்ல மதத்தின் பேரால்—ஜாதியின் பேரால்-புரோலேடேரியன் — பாட்டாளி- என்று பேசும்போது நம் கண் முன் தோன்றும் உருவம் உழைத்து உருக்குலைந்து, தன் உழைப்பை வேறு யாராரோ பறித்துக்கொள்ளக்கண்டு பதறி அதனை மாற்ற முடியாததால் திகைத்துத் தலைமீது கைவைத்துக் கொண்டிருக்கும் ஏழையின் உருவம்திராவிடன்-அத்தகைய உருவத்தைத்தான் ஆக பூர்ஷுவா என்பதற்குப் பதில் நம் நாட்டு நிலைமையைக் கவனித்து ஆரியன் என்கிறோம்; புரோலேடேரியன் என்பதற்குப் பதில் திராவிடன் என்கிறோம். வர்க்கப் போராட்டம் என்பதுதான் இங்கு நாம் கூறும் ஆரிய—திராவிடப் போராட்டம்.

திராவிடன்-ஆரியன் என்று கற்பனைகளில் காலந்தள்ளி கடுவிஷத்தைப் பரப்புகிறோம் என்று கருதி நம்மீது காய்பவர்கள் இதனை ஆர அமரயோசித்துப் பார்க்கவேண்டும். ஆரியம் என்ற கலாச்சாரம் உழைப்புக்கு மதிப்பளிக்காது, உழைப்பாளிகளிடம் ஆசைகாட்டியோ, அச்சமூட்டியோ பொருளைப் பறித்து சுகப்படுவதற்காக உள்ள ஒரு முறை. இந்த முறை பெரும்பாலானவர்களின் உழைப்பைக் கொண்டு ஒரு சிறு கூட்டம் வாழ்வதாக அமைகிறது. இந்தச் சுரண்டும் கூட்டம் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொரு விதமான பெயருடன் விளங்கும்; ஆதி நாட்களில் கிரீசில் மாஸ்டர் (எஜமான்) என்று அழைக்கப்பட்டது; ரோம் நாட்டில் பெட்ரீஷியன் என்றபெயர் இருந்தது; பிரிட்டனில் பிரபுக்கள், பிரான்சில் அயிஸ்வர்யவான்கள்; ஜப்பானில் சமுராய் என்று இவ்வண்ணம் பெயர்கள் இருந்தன-இங்கு அதே முறையைத்தான் நாம் ஆரியம் என்று சுட்டிக் காட்டுகிறோமேயன்றி வீண் வேலை செய்கிறோம் என்றோ விஷமூட்டுகிறோம் என்றோ யாரும் கருதவேண்டாம்.

திராவிடன் தேய்ந்து திகைத்துத் தலைமீது கைவைத்துக் கொண்டிருக்கிறான்-அவனுடைய உழைப்பை மூன்று முனைகளிலிருந்து மூன்று சக்திகள் பறித்துக் கொள்ளுகின்றன—ஆங்கிலேயன் ஆள்பவனானான், செல்வம்கொண்டு சென்றான் ஆரியன் ஆலய வேந்தனானான், பொருளைத் தூக்கிச் சென்றான்; வட நாட்டான் வணிக வேந்தனானான், பொருளைச் சுமந்து செல்கிறான். இவ்வளவுக்கும் இடமளித்த திராவிடன்,எக்கதியடைய முடியும். தேம்புகிறான் திகைக்கிறான்.

இந்தத் திராவிடப் பெருங்குடி மக்களுக்குப் புது வாழ்வு பிறக்கச் செய்யவேண்டுமே. திராவிடர் கழகத்தின் நோக்க மாயிற்றே இது. எங்ஙனம் செய்வது? ஆரியனை நோக்கி, அடித்துக்கொண்டு போகிறாயே மூட்டையை, இங்கே சிதைகிறேனே நான் என்று கேட்டால் என்ன பதில் வரும்? நீ மட்டுமா முத்தா! உன் முப்பாட்டன் கால முதல் இதுதானே முறை. இதுதானே விதி. இதுதானே சாஸ்திரம். இதுதானே வேதம்! இதுதானே தெய்வ கட்டளை. நீ தெய்வத்துக்குக் கட்டுப்பட்டவன் தானே, மகா பக்திமானாயிற்றே. நீ இந்த தெய்வக் கட்டளையை மீறலாமா? என்றுதானே பேசுவான். திகைக்கும் திராவிடன் என்ன பேச முடியும்? அவன் சார்பிலே இருந்து, இந்தச்சமயம், ஒரு காங்கிரஸ்வாதியோ, கம்யூனிஸ்ட்டோ, யார் வேண்டுமானாலும் பேசிப் பார்க்கட்டும்—சுயமரியாதை பாஷை தவிர வேறு கிடையாதே

"நீ மகாபுரட்டன்! உழைப்பதில்லை. உன் மேனியோ வாடுவதில்லை. ஏரைத்தொட மறுக்கிறாய். ஆலையிலே ஆபீசராகவன்றி, தொழிலாளியாக இருப்பதில்லை ஆண்டவன் உன்னை உழைக்கப் பிறக்கச் செய்யவில்லை, உயர் ஜாதியாகப் படைத்தார் என்று பேசுகிறாய். ஆசை காட்டுகிறாய் மோட்சம் என்று கூறி பயம் காட்டுகிறாய் நரகம் என்று பேசி நான் ஓர் ஏமாளி எத்தன் பேசுகிறான் என்று அறியாமல் கெட்டேன் இதுவரை இதோ விழிப்புற்றேன். இந்தச் சுரண்டலை இனி அனுமதியேன்! என்றுதானே பேச வேண்டும். திராவிடர் கழகம் இந்த மனப்போக்கு பாட்டாளிகளிடம் ஏற்படச் செய்கிறது. கைலாயத்தை நோக்கும் கண்களைக் காரல்மார்க்சைப் பார்க்கச் செய்கிறது! அதுபோலவே ஆங்கிலேயனைக் கேட்டால் என்ன சொல்லுவான்? என்ன சொன்னான்? உங்களுக்குள் ஒற்றுமை இல்லை என்றான். ஏன் இல்லை என்று திராவிடர் கழகம் மக்களை கேட்கிறது. ஒன்றுபடும் மார்க்கத்தை உரைக்கிறது. வடநாட்டானைக் கேட்டால் அவன் 'தேசியம்' பேசி, இந்தியா ஒன்று என்ற கற்பனையைப் பூசி, மயக்குகிறான். திராவிடர் கழகம் அவனைப் பார்த்து இந்த வேஷம் வேண்டாம் திராவிட நாடு திராவிடருக்கே! இங்கு உன் சுரண்டல் வேலை நடக்க இனி அனுமதியோம் என்று கூறுகிறது. ஆக இவ்வளவுக்கும் அர்த்தமும் அவசியமும் இருக்கிறது. மற்றவர்கள் அலட்சியப்படுத்தி விட்டபடியால், இவைகளை எடுத்துக்கூறும் பொறுப்பு நமக்கு அதிகமாகிவிட்டது. எனவே அடுத்த ஆண்டு முதல் மேதினம் திராவிடர் கழகத்தின் அதிகார பூர்வமான விழா நாளாக வேண்டும் என்று நான் விரும்புகிறேன், இம்சைக்கு ஆளான திராவிடனுக்கு, மதத்தின் பேரால் புகுத்தப்பட்டுள்ள ஆசையையும் அச்சத்தையும் நாம் அகற்றியாக வேண்டியவர்களாகிறோம். எனவேதான், திராவிடன் நம்பிக் கொண்டிக்கும் மதம் எவ்வளவு நகைப்புக்கிடமானது என்பதை எடுத்துக்காட்டுகிறோம். நையாண்டி செய்கிறோம், ஆனால் நியாயத்தின் சார்பிலே நின்று பேசுகிறோம்.

ஏசு சமக்காகச் சிலுவையில் அறைபட்டு இரத்தம் சிந்தினார் என்று பேசும் கிருஸ்தவர்கள் மனதிலே தோன்றக்கூடிய உணர்ச்சிக்கும், எங்கள் கடவுளாம் கோபால கிருஷ்ணர், கோபிகையர் நீர் விளையாடுகையில் அவர் தம் சேலைகளைக் கவர்ந்து சென்றார்—குழலும் ஊதினார் என்று பேசும் திராவிடருடைய மனதிலே தோன்றக்கூடிய உணர்ச்சியையும் ஒப்பிட்டுக்காட்டி, மதம் அங்கு எவ்வளவு கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது பாரீர்என்று காட்டுகிறோம்.

இவை யாவும், பாட்டாளிகளின் மீட்சிக்காகவே யன்றி, போட்டி மதம் ஸ்தாபிக்க அல்ல. எனவே தான், மே தினத்தை மற்றவர்கள், கொண்டாடி வருவதைவிட, நாம் நடத்தினால்தான், சமுதாய மத சம்பந்தமான பழம்பிடிப்புகளே, சுரண்டும் பொருளாதார யந்திரத்தை அமைத்தன என்பதை விளக்க முடியும்—விளக்க வேண்டும்.

இந்தக் காரியத்தைக் காங்கிரஸ் செய்யாது—பழைமையின் பெருமைக்குப் புத்துயிர் தருவதே அதன் வேலைத்திட்டம்.

கம்யூனிஸ்டுகள் செய்வதில்லை—அவர்கள் மக்கள் மிரளக்கூடிய பிரசாரம் செய்வது முறையல்ல என்று எண்ணுபவர்கள்.

நாம்தான் செய்ய வேண்டும்—செய்து வருகிறோம் இதற்கு முன்பு இருந்ததைவிட இன்று அவசியம் அதிகமாகிவிட்டது. ஏனெனில் இன்று அரசியல் நிலைமை அடியோடு மாறிக்கொண்டு வருகிறது.

ஆங்கில ஏகாதிபத்யம் நாட்டை விட்டுப் போய்விடுகிறேன் என்று கூறுகிறது. நாளும் குறித்துவிட்டது.

"தேசியம்" தன் முழு ஜொலிப்புடன் விளங்குகிறது ஆசப்அலி அமெரிக்காவில், கிருஷ்ணமேனன் பெல்ஜியத்தில், தேவதாஸ் பிரிட்டனில், இப்படி தூதுவர்கள் திக்கெட்டும் செல்கிறார்கள். பத்திரிகை பலத்துடன் இப்போது சர்க்காரை நடத்துகிறபடியால் அதிகார பலமும் கிடைத்திருக்கிறது. தேசியம் வெற்றிக்களையுடன், வீரத்துடன் ஆட்சிப்பீடம் ஏறியுள்ள நேரம். வெற்றி வெறியாக மாறும் அளவு பலம் இருக்கிறது. எனவேதான் மற்றவர்களின் கிளர்ச்சியை, துளியும் கவலையின்றி காலின் கீழ் போட்டுத் துவைக்கிறது—துவைத்தது சரி என்று கூறுகிறது—மக்களையும் கூறவைக்கிறது. எல்லா இடங்களிலேயும் தேசிய ஆட்சி—எல்லா இடங்களிலேயும் தொழிலாளர்களின் கிளர்ச்சி. கிளர்ச்சி செய்பவர்களின் கதி? வேலூர் சிறை! தலை மறைவு! தடை உத்திரவு! கப்சிப் தர்பார்!

கம்யூனிஸ்டுகள் விஷயம் ஒருவாறு முடிந்தது. இனிக் கருப்புச் சட்டைக்காரர்களைக் கவனிக்க வேண்டியதுதான் என்று தேசிய ஆட்சியாளர்கள் பேசுகின்றனராம். அவர்களா பேசுகிறார்கள்! பாசிசம் பேசுகிறது! அதிகாரம் பேசுகிறது! ஆணவம் பேசுகிறது! ஆணவம் பேசுகிறது என்றேன்—ஆணவத்தைப் பேசவைக்கிறது, அழிவுச் சக்தி!

தாராளமாகக் கவனிக்கட்டும். பாட்டாளிகளின் விடுதலை விழாவான மே தினத்தன்று நான் என்

11-ம் பக்கம் பார்க்க

27—4—51 முதல்

கோயமுத்தூர் - ராஜா & ஷண்முகா ★ சேலம் - பாலஸ்

கொரில்லா...

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

தனர். கொரில்லாப்போர்முறையினால் நாஜிகள் பலவிதத்திலும் துன்பமடைந்தனர். கொரில்லா வீரனொருவன் எதிரிகளிடம் சிக்கிவிட்டால், அவனது ஆவியைப் போக்கினாலும், மற்றவர்களைக் காட்டிக்கொடுக்கமாட்டான்.

நாஜிகள் தங்கியிருந்த இடங்கள் நெருப்பிற்கு இரையாயின. தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டன. தண்டவாளங்கள் பெயர்க்கப்பட்டன. எவ்வளவு வகையில் நாஜிகளுக்குத் தொல்லைகள் தரமுடியுமோ அவ்வளவும் செய்தார்கள் கொரில்லா வீரர்கள். ஆண்களும் பெண்களும் அப்படையில் சேர்ந்திருந்தனர்.

அவர்களின் எண்ணமெல்லாம் எப்படியாவது மாஸ்கோவைக் காப்பாற்ற வேண்டுமென்பதேயாகும்.

காட்டின் மத்தியிலிருந்த சிற்றூர் பிட்ரிஷ்கவோ. அக்கிராமமும், ஜெர்மனியர் பிடியில் சிக்கியது. அக்கிராமத்தில் ரஷ்யர்கள் சேகரித்து வைத்திருந்த உணவுப் பொருள்களையெல்லாம், நாஜிகள் எடுத்துக்கொண்டார்கள் வீடு வீடாகச் சென்று மக்களைப் பல வழிகளிலும் இம்சை செய்தார்கள்.

ஓர் இரவு! ஜெர்மனியரின் தந்திக் கம்பிகளெல்லாம் அறுபட்டுக்கிடந்தன. நாஜிகளுக்குச் சொந்தமான குதிரை லாயமொன்று தீயில் எரிந்து சாம்பலாயிற்று. செய்தியைக் கேள்விப்பட்ட நாஜி அதிகாரிகளின் மீசைகள் துடிதுடித்தன! கண்கள் சிவந்தன!

மறுநாள் குதிரைகள் கட்டப்பட்டிருந்த லாயம்! அதன் அருகே மெல்ல மெல்ல ஒரு உருவம் வந்தது! ஆமாம் கொரில்லா வீரன்தான் அவன்! ஒரு கையில் ரிவால்வர்! மெதுவாக நடந்து, லாயத்தின் உட்புறத்தை வந்து சேர்ந்தான், ஏதோ மருந்தை எடுத்துக் கீழே வைத்தான்! பற்றவைக்க ஆரம்பித்தான்!

ஒரேநொடி! அய்யோ! எங்கிருந்தோ ஒரு நாஜி வீரன் அவன் மேல் பாய்ந்தான். கொரில்லா வீரன் பிடிபட்டான். அவனை ஒரு வீட்டில்கொண்டுபோய் அடைத்தார்கள். நாஜி அதிகாரிகள் வந்தார்கள். அவனைச் சோதனை போட்டார்கள் கொரில்லா வீரன் ஆண் அல்ல பெண். ஆமாம் இளம் பெண்! டான்யா! பதினெட்டு வயது அழகிய பாவை! கட்டான தேகம்! ஒளிவீசும் கண்கள்! மின்னும் கன்னங்கள்!

அகப்பட்ட எதிரி ஆண் அல்ல அணங்கு என்பதை அறிந்ததும் ஜெர்மனியர் திகைத்தனர்.

நாஜிகள், இளம் பெண்ணைத் தம் இஷ்டப்படியெல்லாம் அடித்தார்கள், குத்தினார்கள்!

மறுநாள் அவளுக்குத் தூக்குத் தண்டனை தரவேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டது.

நாஜி அதிகாரி, டான்யாவைப் பார்த்துப் பற்பல கேள்விகள் கேட்டான்.

'நீ யார்?'

'ரஷ்யப் பெண்!'

'அதுதான் தெரிகிறதே! உன் பெயரென்ன?

'சொல்லமாட்டேன்!'

'குதிரை லாயத்திற்குத் தீ வைக்க முயன்றது உண்மையா?'

'முற்றும் உண்மை!'

'ஏன் அப்படிச் செய்தாய்?'

'நீங்கள் அழிய வேண்டுமென்று ஆசைப்பட்டதால்......'

'யார் தூண்டுதலின் மேல் இங்கு வந்தாய்?'

'என் மனதின் தூண்டுதலினால் வந்தேன்!'

'ஆகா! அப்படியா?......உன்னோடு வந்தவர்கள் எத்தனை பேர்?'

'சொல்லமுடியாது!'

'இதோ பார் சொல்லும்படி செய்கிறேன்' என்று கூறிவிட்டு நாஜி அதிகாரி தன் இடையில் கட்டியிருந்த 'பெல்ட்'டை அவிழ்த்து, டான்யாவைப் பலமாக அடித்தான்.

அதிகாரியின் கைநோகவே, அந்த வேலையை, நான்கு சிப்பாய்கள் தொடர்ந்து செய்தார்கள்!

'சொல்லுகிறாயா, இல்லையா?'

'செத்தாலும் சொல்லமாட்டேன்!'

'நீ இத்தனை நாட்கள் எங்குத் தங்கியிருந்தாய்?'

'மறந்துவிட்டேன்!'

'நையாண்டியா செய்கிறாய்?' என்று பற்களைக் கடித்துக்கொண்டு, திரும்பவும் அடிக்க ஆரம்பித்தான், நாஜி அதிகாரி.

அவளை வேறொரு வீட்டிற்கு அழைத்துச் சென்றார்கள். இடுப்பில் ஒரு சிறிய கால்சட்டையைத் தவிர, மற்ற ஆடை அத்தனையும் கழற்றிவிட்டார்கள்! நாஜி வெறியர்கள் அடித்த அடியை எல்லாம் வீரப் பெண் டான்யா சகித்துக்கொண்டாள். அடியைத் தாங்கமாட்டாமல் சிலநேரங்களில் மட்டும் 'அம்மா!' என்று வாய்விட்டுக் கதறினாள்.

'தண்ணீர்' என்றாள் ஒருமுறை குடிக்க மண்ணெண்ணெய் தரப்பட்டது.

சிறிது நேரம் கழித்து, நாஜிச் சிப்பாய்கள் கொரில்லாப் பெண்ணைச் சுற்றிலும் நின்றுகொண்டு தங்கள் களியாட்டத்தை ஆரம்பித்தார்கள.

ஒரு சிப்பாய் ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தான். ஒருவன் சேர்த்தணைத்தான்! ஒரு சிகரெட்டினால் அவள் கண்ணாடிக் கன்னத்தைச் சுட்டான்!

இப்படியாக, இரவு பத்து மணியிலிருந்து மறுநாள் பகலவன் உதிக்கும் வரைக்கும், சிப்பாய்கள் தங்கள் இஷ்டப்படியெல்லாம் இளம் பெண்ணைத் தாக்கித் துன்புறுத்தினார்கள்.

கதிரவன் ரத்தக் கண்ணீர் வடித்

(12-ம் பக்கம் பார்க்க)

Edited Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2-45 Muthumari Chetty Street, Madras.